விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 15 சனிக்கிழமை (30.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# எமது தனித்துவம் எமக்குத் தேவை!



## கனேடிய அமைச்சரிடம் சி.வி. எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர்கள் பிரிவினையைக் கோரவில்லை. ஆனால் அவர்களது தனித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையே கோருகின்றனர் என யாழ்.வந்த கனடா வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் டியோனிடம் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யுத்தம் நிறைவடைந்து 7 வருடங்களாகின்ற போதிலும் இராணுவம் வடக்கிலிருந்து வெளியேறவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(23-ம் பக்.)

## "தாங்க முடியாத கடன் சுமை"

(கொழும்பு)

தாங்கிக் கொள்ள முடியாத அளவு கடன் சுமையில் நாட்டை இழுத்துப் போடும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் நிலை தற்போதைய அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இதன்படி இலங்கை தற்போது 09 இலட்சம் கோடி ரூபாய் கடன் சுமையை எதிர்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆட்சியாளர்கள் தமது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றி இருந்தால் நாடு இவ்வாறான ஒரு நிலைமைக்கு முகங்கொடுத்திருக்காது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## "கொட்டும் மழையிலும் கோஷம்"
## இரண்டாவது நாள் பாதயாத்திரை



23ஆம் பக்கம் பார்க்க....

## இனவாத பாதயாத்திரைக்கு தமிழர்கள் அஞ்சத் தேவையில்லை
### அமைச்சர் டிலான் கருத்து

(கொழும்பு)

இனவாதத்தை முன்னிறுத்தி பாதயாத்திரை முன்னெடுக்கப்படுகின்றது என்பதற்காக அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டில் தடைகளோ முட்டுக்கட்டைகளோ ஏற்பட்டுவிடும் என்று தமிழ் பேசும் மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதனூடாக தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவே தேசிய அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் பாதயாத்தி

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் அரசியலமைப்பு
### அவசியம் என ஸ்ரீபனிடம் சம்பந்தன் வலியுறுத்து



(கொழும்பு)

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்புச்சட்டம் உருவாக்கப்படுமானால், அது இலங்கையில் நீண்டகாலமாக காணப்படும் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வாக அமையும். அதற்கான சந்தர்ப்பம் தற்போது அமைந்துள்ளது. அந்தச் செயற்றிட்டத்தில் நாங்கள் பொறுப்பாக ஈடுபட்டிருக்கிறோம்.

எமது மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் அரசியல் சாசனம் உருவாக்கப்படுமாக இருந்தால்,

23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் எம்.பி பியசேன கைது

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட முன்னாள நாடாளுமன்ற உறுப்பினரான பி.பியசேன நேற்று கொழும்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## 8 ஆண்டு மறியல்; 3 மாத சிறை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் வெடி பொருட்களை வைத்திருந்த நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மூன்று மாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பிலான

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி ஆட்சியமைக்க ஐ.தே.க முயற்சி
### ஜே.வி.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திர கட்சியை இரண்டாக பிளவுபடுத்தி தனி ஆட்சி ஒன்றுக்கான விதையை போடுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா சுதந்திர கட்சியின் சில அங்கத்தவர்களை கொண்டு முயற்சி

24ஆம் பக்கம் பார்க்க....

## வழிபாட்டுக்கு அனுமதி தாருங்கள்

(யாழ்ப்பாணம்)

புனித ஆடி அமாவாசை விரதம அன்று கீரிமலையின் புனித இடங்களில் வழிபாட்டுக்கு அனுமதி தருமாறு இந்து மதத்தினரால் ஜனாதிபதி மற்றும் இந்து கலாசார அமைச்சருக்கு நேற்றைய தினம் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரை அகில இலங்கை சைவ மகாசபை மற்றும் ஆலய தர்மகர்த்தாக்கள் இணைந்து பொதுமக்

23ஆம் பக்கம் பார்க்க....

## 18 இலட்சம் ரூபாய் பெறுமதியான கிலோ கேரள கஞ்சா மீட்பு



23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று நல்லிணக்க செயலணி அமர்வு

(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கத்திற்கான பொறிமுறைகள் செயல்முறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான செயலணியின் அமர்வு இன்றைய தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில் பொதுமக்கள் கலந்து கொண்டு தமது கருததுக்களை வழங்க முடியும் என அறிவிககப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமானது கடந்த காலத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரித்து இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக விசாரணை பொறிமுறைகள் மற்றும் அலுவலகங்களை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் காணாமற்போனோர் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கான அலுவலகம், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள்நிகழாமை தொடர்பான ஆணைக்குழு, விசேட வழக்கு தொடுபவரை உள்ளடக்கிய நீதிப்பொறிமுறை, இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் வேறு பொறிமுறைகள் என்பன அமைக்கப் படவுள்ளன.

அவை எவ்வாறு அமைய வேண்டும என்பது தொடர்பான முன்மொழிவுகள் பொதுமக்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

இவை தொடர்பான தகவல்கள், சிபாரிசுகள், ஆலோசனைகள், முன்மொழிவுகளை தனியாகவோ குழுக்களாகவோ சங்கங்களுடாகவோ சமுகமளித்து எழுத்து மூலமாகவும வாய்மொழி மூலமாகவும் தெரிவிக்க முடியும். மேற்படி அமரவானது இன்றைய தினம் 30 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும், நாளை 31 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்திலும், ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செயலகத்திலும், 6 ஆம் திகதி யாழ் மாவட்டச்செயலகத்திலும், 7 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும்காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம் பெறவுள்ளது. (செ-9)


## காணி விற்பனைக்கு

சங்கானை தொட்டிலடி சந்தியில் இருந்து சங்கானைக்குசெல்லும்வீதியில் 50M தூரத்தில் 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :-
0772007662

(5461)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வட்டாரம் | :- | 14 |
| ஆதன இலக்கம் | :- | 25 (புதிய இலக்கம்) |
| கீரிமலை வீதி | | |
| கிராமசேவையாளர் பிரிவு | :- | J/141 |

வட்டாரம் 14, கீரிமலை வீதி ஆதன இலக்கம் 25 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "பேயன் தோட்டமும் விசால மாக்கையும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 08 கொண்ட இவ்வாதனமானது நீர்வேலி தெற்கு பரமேஸ்வரனும் பெண் றஞ்சினியும் இவர்களால் கலையரசி வீதி நவாலி தெற்கு மானிப்பாய் மரியநாயகம் ஜோன்சக்ஸன் பெண் அனெஸ்ரிகா என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 9357ஆம் இலக்க 2014.05.01ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு.கே.ஐயாறு அவர்களால் வரையப்பட்ட 2201 இலக்க 1975.08.16ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "பேயன் தோட்டமும் விசால மாக்கையும்" நிலப்பரப்பு 08 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மரியநாயகம் ஜோன்சக்ஸன் பெண் அனெஸ்ரிகா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(5467)

## பெயர்மாற்றம்

செல்வாபுரம் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட ஜெயகுணநாதன் – புவிராசா ஆகிய எனது பெயரை ஜெயகுணநாதன் றித்திக்கேஷ் என்ற பெயராக மாற்றம் செய்து இன்று முதல் இப் பெயரையே என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன் படுத்துவேன் என்பதனை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
ஜெயகுணநாதன் றித்திக்கேஷ்

[5460]

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி றோஸ்மேரி மரியதாசன்



எமது நிறுவனத்தின் சக ஊழியரான **திரு. ம.டேமியன் நிரோசன்** அவர்களின் அன்புத் தாயார் **திருமதி றோஸ்மேரி மரியதாசன்** அவர்களின் மறைவினை ஒட்டி எமது நிறுவன ஊழியர்கள் சார்பாக திரு.டேமியன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா நித்திய சமாதானத்தில் இளைப்பாறிட இறைவனை வேண்டுகின்றோம்.

(C-5339)

பென்குயின் ஊழியர்கள் (யாழ்ப்பாணம், UK)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

# 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது

(பளை)

பளை சுண்டிக்குளம் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 6 பேருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றினால் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த ராஜபகஷவின் வழிகாட்டலின் கீழ் பொலிஸ் விசேட பிரிவினர் சுண்டிக்குளம் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வநதுள்ளனர்.

இதன்போது அப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் தடைசெய்யபபட்ட கசிப்பு உற்பததியில் ஈடுபட்டதாக சந்தேகத்தின்பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை 4 பேரையும் கடந்த புதன்கிழமை 2 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்த 45 கசிப்பு போத்தல்களும் 100 கோடா போத்தல்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களிடம் இருநது கைப்பற்றப்பட்ட பொருட்களின் அடிப்படையிலேயே அதிகூடிய தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது. (செ-2,9)

# எதிரணியின் எம்.பிகளுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்றத்தின் கட்டளையை மீறிய ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் 15 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பாணை விடுக்கப் பட்டுள்ளது.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் முதலாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப் பட்டுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்புப் பேரணியை கொழும்பு செரமிக் சந்தியூடாக முன்னெடுக்க வேண்டாம்என நீதிமன்றத்தின் உத்தரவை மீறி செயற்பட்டமை தொடா பிலேயே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (செ-11)


# வேலைவாய்ப்பு

இலங்கையின் முதற்தர காப்புறுதி நிறுவனமான AIA உடன் இணைவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்



## குழு முகாமையாளர்

தகைமைகள் :-

i. தலைமைத்துவ பண்பு
ii. துறைசார் முன் அனுபவம்

அனுகூலங்கள் :-

i. எல்லைகளற்ற வருமானம்
ii. வருமான இழப்பீடு வழங்கப்படும்
iii. வெளிநாட்டு பயணங்கள்

## அலுவலக உத்தியோகத்தர்

தகைமைகள் :-

i. G.C.E. A/L இல் சித்தியடைந்திருத்தல்
ii. மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருத்தல்

(5465)

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான உங்கள் விண்ணப்பங்களை சுயவிபரக் கோவையுடன் (With 2 Non Related Refree) 08.08.2016 ற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி :- AIA Insurance Lanka PLC
62/6, Stanley Road, Jaffna.

தொலைபேசி :- 021 222 1215, 076 528 9947

GREAT PLACE TO WORK Best companies to work for 2016 Sri Lanka


## மரண அறிவித்தல்

### பி.தர்மநாயகம் (T.A)

[ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்]



*கரவெட்டியை பிறப்பிடமாகவும் ஓமந்தை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் பிலிப் தர்மநாயகம் (T.A) 29.07.2016 அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற பிலிப் – சிசிலியா தம்பதிகளின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் – அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி யோசபின் புஷ்பராணியின் அன்புக் கணவனும், தர்சிதன், தர்சிகா, பெனி, மனெக்ஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகன், டயானா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜேசன், ஆத்மிகா ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான திருமதி மரியமுத்து ஞானப்பிரகாசம், இராசநாயகம், திருமதி லலிதா அரியநாயகம், செல்வநாயகம் மற்றும் ராஜேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியநாயகம், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், இரத்தினாவதி, குலநாயகம், துரைராஜா, லூர்த்தம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 01.08.2016 திங்கட்கிழமை கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று கரவெட்டி சேமக்காலையில் (கீரிப் பல்லி) நல்லடக்கம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

தகவல் :- குடும்பத்தினர்
0777779867 / 0772274464


(C-5337)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் வடக்கு ஆளுநர், முதலமைச்சருடன் சந்திப்பு



(படங்கள்:-உ:சாளின்)



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு நேற்று முன் தினம் வருகை தந்த கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோன் (Stéphane Dion) நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தார். 13 வருடங்களின் பின்னர், உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, கனேடிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகை தந்திருப்பது விஷேட அம்சமாகும்.

நேற்று முன்தினம் வருகை தந்த ஸ்டீபன் டியோன் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்திருந்தார் மேலும், அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்திருந்தார், இதேவேளை, நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அவர்.

முன்னதாக முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இந்த சந்திப்பின் பின்பு சிவில் சமூகம் உள்ளிட்ட குழுவினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

இந்த சந்திப்புக்களின் போது இலங்கைக்கான கனடா தூதுவர் செல்லி வைர்ரிங்ம் உடனிருந்தார். (இ-4)

# சரியான முறையில் ஆட்சி செய்திருந்தால் இரு கால்களும் தேயாமல் இருந்திருக்கும்

## மகிந்தவின் பாதயாத்திரை குறித்து ஜனாதிபதி சாடல்

*(கொழும்பு)*

***முன்னாள் தலைவர்கள் சரியான முறையில் அரசாட்சி செய்திருந்தால் இரு கால்களும் தேயும் வரை நடந்து செல்லும் தேவை ஏற்பட்டிருக்காது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.***

மாவனெல்லை பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம் பெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதிகார மோகம் படைத்த ஒருசிலர் தான் செல்லும் வழி அறியாமல் பாதையில் நடந்து சென்றபோதும் அரசாங்கம் சுயநினைவுடனும் பொறுமையுடனும் நடவடிக்கை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பாடுபடுவதாக ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இன்று ஒன்பது இலட்சம் கோடி ரூபாய் கடன் சுமையினால் எமது நாடு அவதிப்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த அரசாங்கம் பாரிய அபிவிருத்தி பற்றி மார் தட்டிக் கொண்டு தாங்க முடியாத கடன் சுமைக்கு நாட்டை இட்டுச்சென்ற போதும் இக்கடன் சுமையினை புதிய அரசாங்கத்தினால் எதிர் கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவித்தார். ஒருமுறை ஜனாதிபதியாக பதவி வகித்து மீண்டுமொரு ஆட்சியைக் கோரி இரு கால்களும் தேயும் வரை நடந்துசெல்வதற்கான தேவை தனக்கு ஏற்படாதெனத் தெரிவித்த ஜனாதிபதி தனது பதவிக்காலத்தில் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உரியவாறு நிறைவேற்றுவதாக தெரிவித்தார். (இ-5-7)

## பாதயாத்திரைக்கு முழுச் சுதந்திரம்

பாதயாத்திரையை தடுக்க அரசு பல முட்டுக்கட்டைகளை இட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் நாம் பாதயாத்திரையை தடுக்கவில்லை எனவும் அதற்கு முழுச்சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்தகால மகிந்தவின் அரசே மக்களின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களின் போது தாக்குதல்களை நடத்தி கொலைகளை செய்தது.

உதாரணமாக ரதுகஸ்வெல சம்பவம், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் நடத்திய போராட்டம் போன்றவற்றில் தாக்குதல்கள் நடத்தி கொலைகளை செய்திருந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

தற்போது அவ்வாறு நடைபெறுவதில்லை, கூட்டு எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரைக்கு எந்தவித இடையூறையும் அரசு ஏற்படுத்தவில்லை. மேலும் இப்பாதயாத்திரைக்கு முழு சுதந்திரத்தையும் நல்லாட்சி வழங்கியுள்ளது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார். (இ-5-7)

## கொழும்புக்கு வெளியே நகரும் போதைப்பொருள் களஞ்சியங்கள்

பாரியளவிலான போதைப் பொருள் களஞ்சியசாலைகளை கொழும்பு நகருக்கு வெளியே நகர்த்துவதில் போதைப்பொருள் மாபியாக் கும்பல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

களுத்துறை பிரதேசத்தில் அண்மையில் ஐம்பது இலட்சம் பெறுமதியான கொகெய்ன் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது பல தகவல்கள் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நகரில் பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் திடீர் சோதனைகளை மேற்கொள்வதன் காரணமாக பாரியளவிலான போதைப்பொருளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பாதுகாப்பான சூழல் இல்லாமல் போயுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு நகருக்கு தொலைவில் உள்ள பிரதேசங்களில் போதைப்பொருட்களை களஞ்சியப்படுத்தி அவற்றை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சுங்கப் பிரிவினர் ஊடாகவே நாட்டினுள் பெருமளவான போதைப்பொருட்கள் எடுத்து வரப்படுவதாகவும், போதைப் பொருள் வர்த்தகர்களுடன் சுங்கப்பிரிவினர் ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் குறித்த விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5-7)

## பாத யாத்திரையில் நாமல் அணி



மகிந்த ஆதரவு அணியினால் முன்னெடுக்கப்படும் கொழும்பு நோக்கிய பாத யாத்திரையின் இரண்டாம் நாள் நேற்றுக்காலை மாவனெல்லை உத்துவானக்கந்த பிரதேசத்திலிருந்து ஆரம்பமாகியது. நேற்று முன்தினம் குறித்த பேரணி பெரதேனியாவில் இருந்து மாவனெல்லை கனேதென்ன பிரதேசம் வரையில் பேரணியாக சென்றது.

மக்கள் போராட்டம் எனும் தொனிப்பொருளிலான இந்த பாதயாத்திரை நாளை மறுதினம் முதலாம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளது.

நேற்று நாமல் எம்.பி. தலைமையிலானகுழுவினர்பாதயாத்திரையில் இணைந்துள்ளதை படத்தில் காணலாம். (இ-5-7)

## பாதயாத்திரையை நடத்துவது அலிபாபாவும் 40திருடர்களும்

மகிந்த ஆட்சியில் ஊழல் திருட்டுக்களில் ஈடுபட்டவர்கள் தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காகவே பாதயாத்திரை செல்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

[illegible] பவர்களுக்காக கொழும்பில் நேற்று நடைபெற்ற மருத்துவ முகாம் ஒன்றில் கலந்து கொண்ட போதே எஸ்.எம். மரிக்கார் இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு சேவை செய்யவேண்டியவர்கள், தங்களை [illegible] கொள்வதற்காக இந்த பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர்.

இதில் கலந்து கொள்பவர்கள் அலிபாபாவும் 40 திருடர்களையும் போன்றவர்கள். நல்லவர்கள் எனக் கூறுவதற்கு இதில் எவரும் இல்லை எனவும் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரட்டும் இலங்கை சிங்கங்கள் மீண்டு வருமா அவுஸ்திரேலியா?

பல்லேகெல மைதானத்தில் நடந்து வரும் முதல் டெஸ்டில் இலங்கை அணி அவுஸ்திரேலியாவுக்கு 268 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தற்போது டெஸ்ட் தொடரில்ஆடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் பல்லேகெல மைதானத்தில் நடந்து வருகிறது.

முதல் இன்னிங்சில் இலங்கை 117 ஓட்டங்களும் அவுஸ்திரேலியா 203 ஓட்டங்களும் குவித்தன.

பின்னர் 86 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி குஷல் பெரேராவின் (176 ஓட்டங்கள்) அபார சதத்தால் 353 ஓட்டங்கள் எடுத்தது.

இதனால் அவுஸ்திரேலிய அணிக்கு 268 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணிகு தொடக்க வீரர் வோர்னர் ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

இதைத் தொடர்ந்து வந்த கவாஜா 18 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மற்றொரு தொடக்க வீரரான ஜோ பேர்ன்சும் (29) நிலைக்கவில்லை.

இந்நிலையில் அணித்தலைவர் ஸ்மித் (26), அடம் வோஜஸ் (9) ஆகியோர் நிதானமாக விளையாடி வந்தனர். இதற்கிடையில் அவுஸ்திரேலியா 27 ஓவர்கள் முடிவில் 83 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால் 4ஆவது நாள் ஆட்டம் அத்துடன் முடிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா வெற்றிக்கு இன்னும் 185 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. கைவசம் 7 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்று கடைசி நாள் ஆட்டத்தில் ஸ்மித், அடம் வோஜஸ் ஆகியோர் நிலைத்து நின்று விட்டால் அவுஸ்திரேலியா வெற்றியை எளிதில நெருங்கி விடும்.

அதேசமயம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் இந்த ஆடுகளத்தில் இருவரும் நிலைத்து நின்று விளையாடுவது மிகவும் கடினம்.



மேலும், இந்த டெஸ்டில் முதல் நாளில் இருநதே ஆட்டத்தின் இடையே மழை குறுக்கிட்டு வருகிறது. நேற்று காலை யிலேயே மழையால் ஆட்டம் தாமதமாக தொடங்கியது.இன்றும் மழை குறுக்கிட்டால ஆட்டம் எப்படி முடியும் என்று யாருக்கும் தெரியாது.

இருப்பினும் இந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது. (க)

## கிராமசேவகர் போட்டிப் பரீட்சைக்கு இரண்டு இலட்சம் பேர் விண்ணப்பம்

### செப்டெம்பர் 03 பரீட்சை

கிராமசேவகர் போட்டிப் பரீட்சைக்காக இம்முறை இரண்டு இலட்சம் பேர் தோற்றவுள்ளதாக அமைச்சர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராம சேவகர்களை இணைத்துக் கொள்ளும் நோக்கில் நடைபெறவுள்ள போட்டிப் பரீடசை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்காக பல்வேறு மாவட்டங்களிலிருந்து விண்ணப்பம் செய்துள்ளனர்.சுமார் இரண்டாயிரம் கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக இந்தப் போட்டி பரீட்சை நடத்தப்படுகின்றது.

போட்டிப் பரீட்சையில் அதிகளவு புள்ளிகளைப பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் கிராம சேவகர்களாக நியமிக்கப்பட உள்ளனர். வடக்கு கிழக்கில் அதிகளவில் கிராம சேவகர்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகன்றது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.(இ-5-7)

## லொறி-முச்சக்கரவண்டி விபத்து




(கோப்பாய்)

மானிப்பாய் வீதி உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலைக்கு முன்பாக இடம்பெற்ற லொறி - முச்சக்கரவண்டி விபத்தில் முச்சக்கரவண்டியை செலுத்தி வந்த சாரதி படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் பகுதியிலிருந்து மானிப்பாய் வீதி வழியாக மருதனார்மடம் நோக்கி பயணித்த லொறியும் மருதனார்மடப் பகுதியி லிருந்து உரும்பிராய் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் முன்னால் சென்ற பாரவூர்தி ஒன்றை முந்திச்செல்ல முற்பட்டபோதே மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது.


விபத்தின் போது முச்சக்கரவண்டி தடம் புரண்டதனால் முச்சக்கரவண்டிச் சாரதி தலையிலும் காலிலும் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.விபத்தின் போது முச்சக்கரவண்டி தடம் புரண்டதினால் பாரிய சேதங்களுக்குள்ளாகியுள்ளதுடன் லொறியின் முன் பகுதியும் சேதமடைந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து இடம்பெற்ற வீதியில் அபாயகரமான வளைவு மற்றும் பாடசாலை ஒன்றும் இருப்பதால் இவ்விடத்தில் வீதிச்சமிக்ஞை குறியீடுகள் முறைப்படி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் அதனை அவதானிக்காது குறித்த வளைவில் செல்லுகின்ற வாகனங்கள் அதிகவேகத்துடன் செல்ல முற் படுவதால் இவ்விடத்தில் அடிக்கடி விபத்து க்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-87)

## கரீபியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் அமேசன் வொரியர்ஸ் வெற்றி




கரீபியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணிக்கெதிரான நேற்றைய போட்டியில்அமேசன்வொரியர்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை பெற்றுக்கொணடது.

பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி சார்பில் சொயிப் மலிக் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

அமேசன் வொரியர்ஸ் அணி சார்பில் தன்வீர் 2 விக்கெட்டுகக்ளை கைப்பற்றினார்.

143 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய அமேசன் வொரியர்ஸ் அணி ஸ்மித் மற்றும் மெடின்சன் ஆகியோரின் அரைச்சதத்தின் மூலம் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ஸ்மித் மற்றும் மெடின்சன் தலா 50 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.பந்து வீச்சில் ரெய்பர் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஸ்மித் தெரிவுசெய்யப்பட்டார். (க)

## புகையிலை நிறுவன வரி 90 வீதமாக அதிகரிப்பு

புகையிலை நிறுவனங்களின் வரியை 90 வீதமாக அதிகரிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

இது தொடர்பான ஆலோசனையை அடுத்த வாரம அமைச்சரவையில் முன் வைப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி, புகையிலை நிறுவனங்களினால் தற்போது அறவிடப்படும் நூற்றுக்கு 72 வீத வரி 90 வீதமாக அதிகரி க்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம் வற் வரி ஊடாக கிடைக்கும் வருமானத்தை விட அதிக வருமானம் பெற முடியுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## முரளிதரன் பிடிவாதகாரன் ஜெயவர்த்தன தெரிவிப்பு

முத்தையா முரளிதரன் எப்போதும் தற்காப்பு மனநிலையை கொண்டவர் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ஜெயவர்த்தன வெளிப்படையாக கூறியுள்ளார்.

இலங்கை அணியின் தலைவராக இருந்த போது முரளிதரன் விடயத்தில் அவரை ஊக்குவிப்பது தனக்கு சவாலாக இருந்ததாக ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரபல இணையத்தளம் ஒன்றிற்கு அவர் அளிதத்துள்ள பேட்டியில் நான்இலங்கை அணியின் தலைவராக இருந்த போது முரளிதரனை தற்காப்பு மனநிலையில் இருந்து வெளியே கொணடு வருவது சவாலாக இருந்தது.

இருப்பினும் அவரது அந்த குணம் அவரை எந்த நிலையிலும் கீழே தள்ளிவிட வில்லை. நான் மாறுபட்ட தலைவராக இருந்தேன் என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# வல்வையின் கணித விழா-2016

வல்வை சிதம்பராக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஆதரவில் SUBARA
வின் அனுசரணையில் வல்வை சிதம்பராக் கல்லூரி நலன்புரி
வலையமைப்பு (CWN 11 PLUS) பாடசாலைகளுக்கிடையில் நடத்திய

## கணிதப்போட்டி -2015 இற்கான பரிசளிப்பு விழா

காலம் - 30.07.2016 சனிக்கிழமை
நேரம் - 10 .00 மணி
இடம் - வல்வை முத்துமாரியம்மன் திருமண மண்டபம்

### தலைமை

**திரு.தி.முரளிதரன்** அவர்கள்
தலைவர்,
சிதம்பராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.

### பிரதம விருந்தினர்

**திரு.ஆர்.இரவீந்திரன்** அவர்கள்
செயலாளர்,
மாகாணக் கல்வி, விளையாட்டு,
பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, வடக்கு மாகாணம்.

### சிறப்பு விருந்தினர்

**திரு.எஸ்.நந்தகுமார்** அவர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி கல்வி வலயம்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்
**சிதம்பராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.**

(C-5326)

# டென்மார்க் பிராண்டாபதி ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயம்

தேர்த்திருவிழா 30.07.2016 சனிக்கிழமை
தீர்த்தத் திருவிழா 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை

## விசேட திருவடிப் பூசைகள்

ஏழாலை அபிராமி உபாசகி பிரார்த்தனை நிலையம்
சனி.மு.ப. 10 மணிமுதல்
வவுனியா நொச்சிமோட்டை பிரார்த்தனை நிலையம்
ஞாயிறு மு.ப. 10 மணி முதல்

விசேட சொற்பொழிவு

**சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன்** M.A
(ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்)
நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்
அடியார்கள் பாற்குட அபிஷேகம் செய்து கொள்ளலாம்

(அ/5333)

அபிராமி உபாசகி தாயார் பிரார்த்தனை நிலையம் ,ஏழாலை.

# குருத்துவ வெள்ளி விழா நாயகனை வாழ்த்துகிறோம்



30.07.1991 ஆம் ஆண்டு
குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு
இன்று 30.07.2016 இல் குருத்துவப்
பணியில் 25 ஆவது வருட வெள்ளி
விழா நிறைவில் மகிழ்ந்திருக்கும்
அருட்தந்தை மரியாம்பிள்ளை
யேசுரட்ணம் அடிகளாரை மனம்
நிறைந்த நன்றியுடன் இறை பணி
சிறக்க வாழ்த்துகிறோம்.

அருட்தந்தை ம.யேசுரட்ணம்
இளவாலை பங்குத்தந்தையும்
இளவாலை மறைக்கோட்ட
குருமுதல்வரும்.

(5450)

குடும்பத்தினர்
குருநகர்,
யாழ்ப்பாணம்.


# Golden Way Spoken English Pack



சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க வீட்டிலிருந்தவாறே பயிற்சி பெறலாம்.

ஏன் யோசிக்கிறீங்க ? உங்களாலும் ஆங்கிலத்தில் பேச முடியும்.

◄ பூரண தமிழ் மொழி மூல விளக்கம். ◄ ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கண புத்தகங்கள். ◄ Spoken English CDs. ◄ Gift Vouchers ◄ Hand Bag வழங்கப்படும். ◄ காலம். 60 நாட்கள். ◄ Diploma In English சான்றிதழ். Pack விலை 1790/- மட்டுமே

Free இலவசம்
ரூ.10,000/- பெறுமதியான
Cash Gift Vouchers

மேலதிக விபரங்களை பெற, பெயர் , முகவரி வயது , என்பவற்றை
SMS செய்யுங்கள்
0777-280 834

Jei Educational System , P.o.Box.119 .Kandy- Tel.0813-840 815

Face book Lees Spoken English


# இராசி பலன்

30.07.2016
(ஆடி 15, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 8.57 மணிவரை
ரோகினி காலை 6.11 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.59 மணிவரை
சுபநேரம் 3.03- 4.33 மணிவரை
இராகுகாலம் 9.03- 10.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம்<br>மாலை 5.33இற்கு | | சூரி |
| | | | குரு<br>ராகு |
| | சனி | | |

**மீனம்** உடன்பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,திடீர் விரயங்கள் ஏற்படலாம்,வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்,காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்,வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்,பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்,உடல் நலம் சீராகும்,நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** எங்காவது வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம்,சுப விரயங்கள் கூடும் நாள், முயற்சிகளில் கூடிய கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்** புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள், தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**கடகம்** குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்,விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,கௌரவமான நாள்.

**மகரம்** கல்யாணக்கனவுகள் நனவாகலாம்,செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்** முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்,போசன சுகமுண்டு.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்,அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


**விருச்சிகம்** வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்** கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வரவும் செலவும் சமமாகும், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கும் நாள்,தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர்,மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், தொழில் நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் ரம்ழான் நல்லிணக்க விழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது யாழ்.கல்வி வலயத்தினைச்சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட 3 பாடசாலைகளைச்சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் யாழ்.நாவாந்துறை மகா வித்தியாலயம், வைத்தீஸ்வரா கல்லூரி, கொட்டடி நமசிவாயம் ஆகிய பாடசாலைகளுடன் யாழ்.ஒஸ்மானியா கல்லூரியும் இணைந்து கலை,கலாசார நிகழ்வுகளை மேடையேற்றின. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.அஸ்ரப், வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வட மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, உறுப்பினர்களான இ.ஆனோல்ட், அ.அஸ்மின், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான மௌலவி சுபியான், சரபுல் அனாம், பாடசாலை பழைய மாணவர்கள்,ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்,பொ.சோபிகா)

# சிறு தோட்ட தென்னை செய்கையாளர்களுக்கு மானியத்திட்டம் வழங்கல்

இலங்கையின் வட பகுதியில் தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர்ல் பல மானிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும் தென்னை உற்பத்தியாளர்களினால்தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட சிபாரிசுக்கமைவாக பசளையிடும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. இதனைத் தவிர்த்து தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு , மன்னார், வவுனியா மாவட்டங்களில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் சிறுதோட்ட தென்னை செய்கை யாளர்களுக்கான அசேதனப் பசளை மானியத் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

8 தென்னைகள் தொடக்கம் 160 தென்னைகளைக் கொண்ட அதாவது 02 பரப்பிற்கும் 40 பரப்பிற்கும் (2.5 ஏக்கர்) இடைப்பட்ட சிறு தோட்டத் தென்னைச் செய்கையாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

இத்திட்டத்தில் ஒரு மரத்திற்காக வழங்கப்படும் அதி உச்ச மானியமானது ரூ.56 ஆகும்.

சிறு தோட்டத் தென்னைச் செய்கையாளர்கள் தங்களுடைய பகுதி கமநல சேவைத் திணைக்களத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி அத்துடன் த்ங்களுடைய காணியின் உறுதி அல்லது காணி அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன் தங்களுடைய சேமிப்புக் கணக்குள்ள வங்கிப் புத்தகத்தின் முதற்பக்கத்தின் பிரதியையும் (வங்கிக் கணக்கிலக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.) இணைக்க வேண்டும்.

பணக் கொடுப்பனவானது தங்களுடைய வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும். மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ள தே.வைகுந்தன் பிராந்திய முகாமையாளர், தென்னைப்பயிர்ச் செய்கை சபை, இல.595/10,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனும் அல்லது 021 222 6014 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# சிவசக்தி முன்பள்ளி சிறாரின் விளையாட்டு விழா இன்று

நீர்வேலி வடக்கு சிவசக்தி முன்பள்ளி சிறார்களின் வருடாந்தவிளையாட்டுவிழா இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் தலைவர் இ.சசிகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில்பிரதம விருந்தினராக கோப்பாய் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் இ.ஐங்கரன், சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி றோ.க.த. பாடசாலை அதிபர் சி.தர்மரட்ணம், ஜே/269 கிராமசேவையாளர் திருமதி. எஸ். பிறேசிலா, வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி தி. தவராசா, பு. சோ.க.க. ஆசிரியைதிருமதிகிவினோதா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# பொதுக்கூட்டம் நாளை

வண்ணை. சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இல.82, நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகத்தில் நடைபெறும். (இ-3)

# பரிசளிப்பு விழா இன்று

கொம்மாந்தறை யாழ்.கம்பர்மலை வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு. இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் குலவீரசிங்கம் பிறேமகாந்தன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி இரஞ்சிதமலர் பிறேமகாந்தன் வழங்கவுள்ளார். (இ-3)

# சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் 94 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல்10 மணிக்கு இல. 276, அரசடி வீதி கந்தர்மடத்தில் அமைந்-துள்ள சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க காரியாலயத்தில்தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந் தின ராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர் களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ச.குமார தாசன், பா.ஸ்ரீ குமார் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## ஆய்வாளர்கள் மீது விசனம்

# யாழ்.பல்கலை;பனைகளை அடையாளம் கண்டு வகைப்படுத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டும்

## அமைச்சர் ஐங்கரநேசன் வலியுறுத்து




(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் கோயம் புத்தூர் வேளாண் பல்கலைக் கழகம் 200 வகையான பனைகளை இனம் கண்டு தனது வளாகத்தில் நட்டுப் பராமரித்து வருகிறது.

அதேபோல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடமும் பனைகளை அடையாளம் கண்டு வகைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன், வடக்கில் ஏனைய மரங்களைவிடப் பனை மரங்களே அதிகம்.

மற்றெல்லா மரங்களையும் விட அதிக பயன்தரக் கூடியவையும்பனைகள்தான். ஆனால் அரிய வளமான பனைகள்பற்றி ஆய்வாளர்கள் அதிகம் கண்டுகொள்வதாக இல்லை என்றும் விசனம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பனை அபிவிருத்தி வார இறுதி நாளான நேற்று முன்தினம் வியாழக் கிழமை பனை அபிவிருத்தி ஆய்வரங்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சீ.வசந்தரூபா தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கத் தொடக்க அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.பனை என்று நாங்கள் பொதுவாக அழைத்தாலும் பனைகளில் வித்தியாசம் உண்டு. வடக்கில் வேறுபட்ட இயல்புகளைக் காட்டுகின்ற பனைமரங்கள் இருக்கின்றன. இவற்றில் குட்டையான பனை மரங்கள், அதிக எண்ணிக்கையான பழங்களைத் தரக் கூடிய பனை, மரங்கள் அதிகம் பதநீரைத் தரக்கூடிய பனை மரங்கள் ,அதிக வெல்லச் செறிவைக்கொண்ட பதநீரைத தரவல்ல பனைமரங்களைக் கள ஆய்வுகளின்மூலம் அடையாளம் காண்பது அவசியம்.

கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகம் 200 வகையான பனைகளை இனம் கண்டு தனது வளாகத்தில் நட்டுப் பராமரித்து வருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடமும் பனைகளை அடையாளம் கண்டு வகைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இவற்றை விவசாய பீடம் இயங்கும் கிளிநொச்சியில் நடுகை செய்து பராமரிக்கவும்முன்வர வேண்டும். இதற்கு பனை அபிவிருத்திச் சபையும் பனை ஆராய்ச்சி நிலையமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடக்க அமர்வில் வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன். யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் மீனா செந்தில்நந்தனன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கா.லோகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

தொடக்க அமர் வைத் தொடர்ந்து ஆய்வரங்கின் காலை அமர்வு பேராசிரியர் மீனா செந்தில்நந்தனன் தலைமையிலும் மாலை அமர்வு பேராசிரியர் கு.மிகுந்தன் தலைமையிலும் நடைபெற்றது. (இ-4)

# நல்லாட்சியும் எதிர்க்கட்சிகளும்

சர்வதேச் மார்க்சிச குழு ஒழுங்கு செய்துள்ள "நல்லாட்சியும் எதிர்க்கட்சிகளும்" என்ற விடயம் தொடர்பான கூட்டம் நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.ஆரியகுளம் பகுதியிலுள்ள D.M.I தனியார் கல்வி நிறுவனத்தில் இடம்பெறும். (இ-3)

# சட்ட வைத்திய அதிகாரியை நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு பொது மக்களால் பல தடவைக்ள் கோரிக்கை விடப்படும் அது குறித்து வட மாகாண சுகாதார அமைச்சு எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள ஆதாரவைத்தியசாலையாக இது ஒன்றே காணப்படுகின்றது.

இப் பிரதேச மக்கள் வைத்தியசாலைக்கு ஒரு சட்ட வைத்திய அதிகாரிஒருவரைநியமிக்குமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரி நின்றும் இதுவரைஅவர்களதுகோரிக்கை நிறைவேற்றப்படவில்லை

எனவே மேற்படி வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைக் கைப்பற்றவே இனவாதத்தை பரப்புகின்றனர்

## ஜே.வி.பியின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அனைத்து குழுக்களும் தமது அதிகாரத்திற்காக இனவாத அடிப்படையில் மக்களை பிரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடிவது, அனைத்து தரப்பினரதும் சம உரிமைகளை வரவேற்பதன் மூலமே என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகோதரத்துவ தினத்தை முன்னிட்டு சோசலிச இளைஞர் ஒன்றியம் கொழும்பு விகாரமஹாதேவி மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் நேற்று கலந்து கொண்டிருந்த அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-5-7)

## கீரிமலை நகுலேஸ்வர ஆலயச்சூழலில் இறங்குதுறை அமைப்பதற்குக் கண்டனம்

பஞ்ச ஈஸ்வரங்களிலொன்றாக ஈழத்தின் வடபால் அமைந்து அருள்பாலிக்கும் வரலாற்றுப் பழைமைமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் சூழல் என்பது என்றும் பக்திபூர்வமான சூழலாக அனைத்து சகல இன மக்களாலும் மதித்துப் போற்றப்படுவது. இப்புனித பூமியில் பல சித்தர்கள் வாழ்ந்து சமாதியடைந்த வரலாறும் கண்கூடான நிகழ்வுகள்.

இந்நிலையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீன்பிடி இறங்குதுறையானது ஆலயத்தின் புனிதத்தன்மைமிக்க சூழலுக்குப் பெரும் பங்கம் விளைவிப்பதாக அமையும். இவ் இறங்கு துறையானது எதேச்சதிகாரமான முறையில் கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இநநடவடிக்கையானது இந்து மகக ளின் மீதான மற்றோர் அடககு முறையாகக் கூட கருதக் கூடியதாகவுள்ளது.

ஏற்கனவே, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் படையினரால் அல்லது படையினரின் ஆதரவுடன் நிகழ்ந்து வரும் அத்துமீறிய விகாரைகள் அமைக்கும் செயற்பாடுகளால் விரக்தியடைந்திருக்கும் இந்து மக்களை மேலும் வேதனைக்குள்ளாக்கும் இவ்வாறான செயற்பாடுகளை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்வாறாக இந்து ஆலயங்களுக்கு - அதன் புனித மிக்க சூழலுக்கு பங்கமேற்படுத்தி இந்து மக்களை வேதனைப்படுத்தும் எதேச்சதிகார செயற்பாடுகள் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் கூறிவைக்க விரும்புகிறோம்.

அதேவேளை, மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதார முயற்சிகளை மேம்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை நாம் வரவேற்று - அவற்றிற்கு ஆதரவளிப்பதுடன், அவ்வாறான முயற்சிகள் தொடர்பான இடங்களைத் தெரிவு செய்யும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதானது தேவையற்ற பிரச்சினைகள் உருவாவதைத் தவிர்க்கக் கூடியதாகவும் அமையும் எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இம் மீன்பிடி இறங்குதுறையினை மக்கள் மீள் குடியேறிய குடியேற்றங்களுக்கு அருகில், கீரிமலை ஆலயச் சூழலுக்கு அப்பால் ஓர் இடத்திற்கு மாற்றியமைப்பதானது மீள்குடியேறிய மக்களுக்கு மிகப்பயன் தருமென்பதை வலியுறுத்துவதுடன், அனைத்துச் சமூகங்களையும் அவ்வச் சமூகங்களின் மத, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் புரிந்து கொண்டு அவற்றைப் பரஸ்பரம் மதிப்பளித்து வாழ்வதே இந் நாட்டில் சமாதான சமத்துவத்துடன் சகல இனங்களும் வாழமுடியும் என்பதையும் சுட்டிக்காட்ட விழைகின்றோம் என அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## சுவிட்சர்லாந்து கப்பல்களில் பணியாற்ற இலங்கை கடற்படையினருக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படை வீரர்களுக்கு எதிர்வரும் நாட்களில் சுவிட்சர்லாந்து தேசிய கொடியுடன் சேவையில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சின் செயலாளர் எல்.பி. ஜயம்பதி தெரிவித்துள்ளார.

இது தொடர்பான இருபக்க உடன்படிக்கை கடற்படை செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் செனவிரத்னவுக்கும் இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் ஹெயின்ஸ் வோகர் இற்கும் இடையில் கைச்சாத்தாகவுள்ளதாகவும் ஜயம்பதி தெரிவித்துள்ளார். (இ-5-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:30 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/6162 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 37 செவ் 2 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/6198 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 52 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: PHD/ பொறியியலாளர்<br>தொ.இ: B/6163 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 41<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/880 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா: 40 செவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:அரசதொழில்<br>நியூசிலாந்து குடியுரிமை<br>தொ.இ: B/6166 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 57 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை தொழில்:MBBS அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/5828 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி<br>கி.பா: 19 சூரிசெவ் 3 இல்<br>தகைமை/தொழில்:O/L/டோகா<br>தொ.இ: B/6167 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.COM/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5829 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் கவனயீர்ப்பு



கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றல் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள், போராளிகள் கொல்லப்பட்டால்

# விசாரணைகள் தேவையில்லை; நாட்டில் எழுதப்படாத சட்டம்

### ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி தலைவர் தெரிவிப்பு



இந்த நாட்டில் தமிழ் மக்கள், தமிழ் போராளிகள் கொல்லப்பட்டால் விசாரணைகள் தேவையில்லை என்பது எழுதப்படாத சட்டமாகவுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற வெலிக்கடை படுகொலையின் 33வது நினைவு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மனிதப்படுகொலை என்று சொல்லும் வகையில் இந்த நாட்டில் கொலைகள் நடைபெற்றுள்ளன. பல்லாயிரக் கணக்கான மக்கள் காணாமற்போகச் செய்யப்பட்டார்கள். சரணடைந்தவர்கள், கடத்தப்பட்டவர்கள் என இப்படி பலருக்கு என்ன நடந்தது என தெரியாதுள்ளது. ஆகவே தமிழ் மக்கள், தமிழ் போராளிகள் கொல்லப்பட்டால் விசாரணைகள் தேவையில்லை என்பது இந்த நாட்டில் எழுதப்படாத ஒரு சட்டமாக இருக்கிறது. ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தை முதன் முதலாக அமெரிக்கா கொண்டு வந்தது. அதில் முழுமையாக மாற்றம் செய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அது வந்தது. சர்வதேச நீதிபதிகளுடன் கூடிய ஒரு உள்ளக விசாரணையை நாங்கள் நடத்துவோம். அந்த உள்ளக விசாரணை ஊடாக யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனைகள் வழங்கப்படும். உண்மைகள் கண்டறியப்படும்.

அதன்மூலம் தமிழ், சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாமென்று கூறப்பட்டது. தற்போதைய பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இந்த தீர்மானத்தின் ஒவ்வொரு வரிகளையும் பார்த்த பின்பு அதனை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தனர். ஆனால் இன்று அந்த தீர்மானத்தின் பிரகாரம் செயற்படவில்லை. நான் உயிருடன் இருக்கும் வரை சர்வதேச நீதிபதிகள் அழைக்கப்படமாட்டார்கள் என ஜனாதிபதி கூறுகிறார். எங்களுடைய நாட்டு நீதித்துறை போதுமானது. நாங்கள் வேறு யாரையும் அழைக்கத் தேவையில்லை என பிரதமர் கூறுகின்றார். இவர்களுடைய கருத்துக்கள் தனிப்பட்ட கருத்து. அது அரசாங்கத்தின் கருத்து இல்லை என கூறிய வெளிவிவகார அமைச்சர் தற்போது நான் சர்வதேச நீதிபதிகளை கோரவில்லை. அவர்களிடம் சில தொழில்நுட்ப உதவிகளை பெறலாம் என்றே கூறினேன் எனக் கூறுகின்றார். மொத்தத்தில் யுத்தக் குற்றங்கள், காணாமற் போதல்கள் தொடர்பாக ஒரு முழுமையான விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை என்பதுதான் முதலாவது விடயம். அதுமட்டுமல்ல விசாரணைகள் இடம்பெறுவதற்கு முன்பாகவே இராணுவத்தினர் விசாரிக்கப்படமாட்டார்கள் என தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. இராணுவத்திற்கு எதிரான விசாரணைகள் நடைபெற மாட்டாது. யாருக்கு எதிராக விசாரணை...? ஏன் இந்த விசாரணை? போன்ற பல்வேறுபட்ட கேள்விகள் தமிழ் மக்களுக்கு எழுந்திருக்கின்றன.

சரியான அரசியல் தீர்வு, காணாமற் போன பிள்ளைகளை கண்டு பிடிப்பது, தமிழ், சிங்கள மக்களிடையே சமத்துவமான வாழ்க்கை முறை, சமத்துவமான அதிகார பகிர்வுகள் என ஏதாவது கிடைத்ததா? ஆனால் தமிழ் மக்களுக்கு தற்போது கிடைத்துக் கொண்டிருப்பது என்ன? முன்னைய அரசாங்கத்தை விடுவோம். இந்த அரசாங்கத்தால் கிடைத்தது என்ன? முழுத்திற்கு முழும் புத்தர்சிலை, சிங்கள குடியேற்றங்கள், இராணுவம் காணிகளை கைப்பற்றுவது. இவை தவிர இந்த அரசாங்கம் என்ன செய்தது. ஆகவே, இந்த அரசாங்கமும் இந்தச் செயற்பாடுகளுக்கு ஒரு மறைமுகமான ஆதரவைக் கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றது.

இந்த நல்லாட்சிக் காலத்தில் எதனையும் எம்மால் செய்ய முடியாதுள்ளது. ஆகவே இது இப்படியே போய் கொண்டிருந்தால் நாம் எங்கே போய் சேரப் போகின்றோம். இது பாதுகாப்பானதா? என்ற கேள்வி எழுகிறது. இதற்கெல்லாம் தலைமை தாங்கக் கூடியவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித்தலைவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். இந்த சிறிய விடயங்களையே செய்ய முடியாத அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஊடாக வடக்கு- கிழக்கு இணைப்பு, சமஷ்டி ஆட்சி முறை, அதிகாரபரவலாக்கம் செய்ய முன்வருவார்களா? இதெல்லாம் நடக்குமா? என்ற கேள்வியுள்ளது. எனவே காலத்தை இனியும் கடத்த முடியாது. இவை வெறுமனே கேள்விகளாக இருக்கக் கூடாது. இதற்கான பதில்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.(2-250)

### வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்க!



முல்லைத்தீவுமாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பொதுமக்களால் அனுமதிக்கப்பட்ட முதியவர் ஒருவர் தொடர்பில் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை மேற்படி வைத்தியசாலையுடனோ அல்லது முள்ளியவளை பொலிஸ் நிலையத்திலோ தொடர்பு கொள்ளுமாறு மேற்படி வைத்தியசாலை பொலிஸ் பிரிவினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

குறித்த முதியவர் சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் தனது உறவுகள் தொடர்பில் எவ்விதமான தகவல்களையும் வழங்கக்கூடிய நிலையில் இல்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர். பிரஸ்தாப முதியவர் சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக வைத்தியசாலையின் இல.5 ஆம் விடுதியின் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-310)




# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பளைப்பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சுண்டிக்குளம் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 29 ஆம் திகதி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது கசிப்பு வைத்திருந்த ஏழு பேர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அதாவது ஐயாயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு இருபதாயிரம் ரூபாவும் பதினையாயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு இருபதாயிரம் ரூபாவும் 175 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபாவும் அரைப்போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபாவும் ஆறு போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு இருபதாயிரம் ரூபாவும் 175 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபாவும் இதேவேளை கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு முப்பதாயிரம் ரூபாவும் என ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

* * * * * * * * * * * * * * * *

கிளிநொச்சி பளைப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் ஆகியவற்றில் மணல் ஏற்றிய இருவருக்கு ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பளைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரையும் டிப்பர் வாகனத்தையும் கைது செய்த பளைப்பொலிஸார் குறித்த நபரையும் டிப்பர் வாகனத்தையும் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எண்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை உழவு இயந்திரத்தில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து அன்றையதினம் மன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

* * * * * * * * * * * * * * * *

கிளிநொச்சி, பளை ஆகிய பகுதிகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திச்சென்ற நான்கு பேரைக் கைது செய்த பளை மற்றும் கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நான்கு பேரையும் கடந்த 27 ஆம் திகதி பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து முப்பத்திரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பளைப்பகுதியில் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச்சென்றவருக்கு ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதியனுமதிப்பத்திரம் மூன்று வாரங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பளைப்பகுதியில் சாரதியனுமதிப்பத்திரமின்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவருக்கு பதின்மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஏழு நாட்கள் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் சமூக சேவையில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு எண்ணாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு சாரதியனுமதிப்பத்திரம் மூன்று வாரங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஒருவார காலம் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (2-312-15)

## வீதியை விட்டு விலகி

# கடைக்குள் புகுந்தது வாகனம்

(பரந்தன்)




வீதியை விட்டு விலகிச் சென்ற வாகனம் அருகாமையிலுள்ள கடைகளை சேதமாக்கியதுடன் குறித்த வாகன சாரதி படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுக்காட்டுச்சந்திப் பகுதியில் நேற்று காலை 6.30 மணியளவில் நடைபெற்றது.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி அப்பகுதியில் அமைந்துள்ள மூன்று கடைகளை சேதப்படுத்தியதுடன் கடைகளுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் ஆகியவற்றை முழுமையாக சேதப்படுத்தி உள்ளது.

சாரதி நித்திரையில் வாகனத்தை செலுத்தியமையால் குறித்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15-309)



கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் யுத்தத்தினால் அழிவடைந்த புனித ஆரோக்கிய மாதா தேவாலயத்தின் திருச்சொரூபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற போது...
(படம்:-பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க பொறிமுறைகள் செயலணியின் கருத்தறியும் அமர்வு நேற்று கிளிநொச்சியில்



(பரந்தன்)

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க பொறிமுறைகள் செயலணியினரின் மக்கள் கருத்தறியும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான குறித்த குழுவின் அமர்வில் கிராம மட்ட அமைப்புக்கள், காணாமற் போனோரின் உறவுகள் என பல்வேறுபட்டோர் தமது கருத்துக்களை பதிவு செய்தனர்.

இதன்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக செயலணியிடம் கருத்துக்களை முன்வைத்தனர்.

யுத்தக்குற்றம் தொடர்பில் வசாரணை மேற்கொள்ளும் குழு சர்வதேச மயப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்டத்தில் மலையக மக்கள் அதிகளவில் உள்ளமையால் அவர்கள் சார்ந்த மக்கள் பிரதிநிதிகளை அரசியல் வாதிகள் நிறுத்த வேண்டுமெனவும் கருத்து பதிவு செய்யப்பட்டது. காணாமற் போனோர் தொடர்பான காரியாலயம் எவ்வாறு அமைய வேணடும் என்பது தொடர்பில் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களிடம் கருத்தறியும் செயற்பாடுகளை ஆரம்பித்த குறித்த குழுவினர் தற்போது பாதிக்கப்பட்டவர்களிடம் கருத்துக்களைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





இதேவேளை அபிவிருத்தி முதல் அரசியல்பிரதிநிதித்துவம் வரை கிளிநொச்சியில் வாழ்கின்ற மலையக மக்கள்பாரபட்சமின்றிஏனைய சமூகங்கள் போன்று சமமாக வாழ்கின்ற சூழலை உருவாக்குங்கள் என கிளிநொச்சி வாழ்மலையக மக்கள்நேற்று செயலணிக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதில் அவர்கள் மேலும் கோரியுள்ளதாவது, கிளிநொச்சியில் குறித்த கால தொடர்ச்சியோடு வாழ்ந்து வரும் மலையக தமிழர் என்ற சமூகத்தைச் சேர்ந்த நாங்கள் இணைந்து இந்த நாட்டின் நல்லிணக்கத்தை வலுப்படுத்தவும் கட்டியெழுபபவும் விரும்புகின்றோம்.

இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதோடு இனங்களுக்குள்ளேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற பொறிமுறைஉருவாக்கப்படல் வேணடும.

சமூக ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஒவ்வொரு சமூகமும் தங்களுடைய அடையாளத்துடன் தனித்துவமாக வாழும் நிலைமை உருவாக வேண்டும்.

மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களிலும் ஏறத்தாழ பெரும்பாலான கிராமங்களில் நாங்கள் பல்வேறு பொருளாதார சமூக கலாசார அரசியல் வாய்ப்பு அற்றவராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவேதான் எதிர்காலத்தில் வரவிருக்கின்ற அரசியல் அமைப்பு சீர்திருத்தம் மற்றும் மேற்கொள்ளவுள்ள நல்லிணக்க முறைமைகளில் நாங்கள் சமமாகவும் சுபீட்சமாக வாழவும் வழிவகை செய்யப்பட வேண்டும்.

நாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டும் நியாயமான வகையில் வாய்ப்புக்கள் வழங்ககப்படாதும் பாரபட்சமாக நடத்தப்படுகின்ற நிலைமை தொடர்ந்தும் காணப்படுகிறது.

எனவே கிளிநொச்சியில் வாழும் மலையக மக்கள் தங்களுடைய மரபுரிமைகள் வாழ்க்கை முறைமைகளில் பொருளாதார கட்டமைப்புக்களை, மொழி உரிமைகளை,கலாசார செயற்பாடுகளை எவ்வித அச்சமோ தயக்கமோ இன்றி கட்டியெழுப்பவும் பேணவும் இந்த சமூகச் சூழலும் பௌதிகச் சூழலும் உளவியல் சூழலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இது எமது நீண்டகால எதிர்பார்ப்பாகும் என அவர்கள் கோரிகைகை விடுத்துள்ளனர். (2-312-15-281)





## யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில்

# யாழ்.பல்கலை.ஊழியர் சங்கத்தினர் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம்



பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கை நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளதைக் கண்டித்து, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தொடர்ந்தும் நேற்று மூன்றாவது நாளாகவும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




மூன்றாவது நாளாகவும் தொடரும் இவ்வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள விவசாய பீடத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு ஆரம்பித்த இப் போராட்டம் தொடர்ந்து பொறியியற்பீட வளாகத்திலும் இடம்பெற்றது.

அரசியல் தலையீடுகளற்ற புதிய நியமனங்கள்வேணடும், மொழிக் கொடுப்பனவு வேண்டும், சம்பளத்தை அதிகரிக்க வேண்டும், மாதாந்த இழப்பீட்டு தொகையை சமமாக வழங்கு, ஓய்வூதியத் திட்டத்தில் பாரபட்சம் ஏன்? சகல பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான காப்புறுதித் திட்டம் வேண்டும், சொத்துக்கடன் தொகையை அதிகரி போன்ற 7 கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.தமது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாதவிடத்து தமது போராட்டங்கள் பல வடிவங்களை எடுக்கும் எனவும் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்ட ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் பொறியில் பீடம் மற்றும் விவசாய பீடங்களின் கல்விச் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(2-312)

# சமூக சேவைகள் அலுவலக கட்டடத் திறப்பு விழா

(சிவநகர்)

முல்லைத்தீவு மாவட்ட த்தின் சமூக சேவைகள் அலுவலகத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில்நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான க. வ.கமலேஸ்வரன், சி.து.ரவிகரன், க.சிவநேசன், அகமது லெவ்வை யாசீன் ஜவாகீர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களானமுதலமைச்சரின் செயலாளர் திருமதி. வி.கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் மி.யேசு ரெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் 10 மில்லியன் ரூபா மூலதன நிதியில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-254)

## நல்லிணக்க பொறிமுறைகள் செயற்பாடு

# எந்தளவிற்கு வெற்றியளிக்குமென கூறமுடியாது

## சிவில் சமூக செயற்பாட்டாளர் சமித் கட்சன் சந்திரலீலா உறுதி

அரசாங்கம் உருவாக்கியுள்ள நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைக்கான செயலணியின் செயற்பாடுகள் எந்தளவு வெற்றியளிக்குமென தம்மால் உறுதியாக தெரிவிக்க முடியாது என சிவில் சமூக செயற்பாட்டாளர் சமித்கட்சன் சந்திரலீலா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நல்லிணக்கப் பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பிலான தேசிய பணியை முன்னெடுப்பதன் ஊடாக, மக்களின்.தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் நிறுவனங்களை வடிவமைக்கும் பொருட்டு செயலணி ஒன்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் 11 உறுப்பினர்களைக் கொண்ட குறித்த செயலணி பொதுமக்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையைத் ஆரம்பித்துள்ளது.

பொதுமக்களுடன் இணைந்து பணியாற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த செயலணில் பங்கு பற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை முழுமையாக உள்வாங்கலாம் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு தலா ஐந்து அல்லது ஆறு சிவில் அமைப்பு பிரதிநிதிகள் இந்த செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

பொறிமுறைகள் உருவாக்கப்படும்போது எந்தளவிற்கு மக்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கவனத்திற் கொள்ளப்படுமென்பதை உறுதியாக எதுவும் கூறமுடியாது எனச் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் கருத்துக்களை முழுமையாக உள்ளடக்கிய வகையில் அறிக்கை தயாரிக்கப்படுமெனவும், அந்த அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளதோடு, அது பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படுமெனவும் சுட்டிக்காட்டிய அவர் இந்த அறிக்கை சர்வதேசத்திற்கு கையளிக்கப்படுமா என்பது தொடர்பிலும் விளக்கமளித்தார் .

அத்துடன் குறித்த அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளதாக செயலணயின் உறுப்பினர்களில் ஒருவரான மிராக் ரஹீம் தெரிவிக்கின்றார்.அவர் தொடர்ந்து கூறுகையில்

“அறிக்கை எப்பொழுது வெளியிடப்படும் என்ற கேளவி எழுந்துள்ளது. முதன் முறையாக கொழும்பில் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியில் இந்த விடயங்கள் தொடர்பில் செயற்படும், இது தொடர்பில் அக்கறை செலுத்தும் அனைத்து சுமார் 90 சிவில் சமூக செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து இந்த விடயங்களை முன்னெடுத்துள்ளோம்.

இந்த சந்தர்ப்பத்தில் அவர்களது கருத்துக்களை வெளியிட முழுமையான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அனைத்து மக்களது கருத்துக்களையும் உள்ளடக்கிய அறிக்கை பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படும் ஆகவே யாரெல்லாம் இந்த கலந்தாலோசனை செயலமர்வில் பங்கேற்றார்கள் என அறிந்துகொள்ள முடியும் என்றார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் அச்சம் வியக்க வைத்துள்ளது

# பின்வாங்கும் பழக்கம் என்னிடம் இல்லை!



(கொழும்பு)

**எத்தனை தடைகள் வந்தாலும் பாதயாத்திரையை கொழும்பை நோக்கிக் கொண்டு செல்வேன். சவால்களை துணிவுடன் எதிர் கொள்ள முடியாது பின்வாங்கும் பழக்கம் என்னிடம் இல்லை. ஆனால் அரசாங்கத்தின் அச்சம் என்னை வியக்க வைத்து விட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பை நோக்கிய பாதயாத்திரையை ஆரம்பித்து சூளுரைத்தார்.**

பொதுமக்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர் கொள்கையில் நல்லாட்சி அரசாங்கம் வற் வரியை அதிகரித்தது. தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகள் மாயமாகிவிட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அதிகாரிகள் சட்டத்தை கையில் எடுத்து செயற்படுகின்றனர். பொலிஸார் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கி சட்ட ஒழுங்குகளை உறுதிப் படுத்த வேண்டும்.

ஆனால் கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிய பாதயாத்திரையை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர். அரசாங்கம் இந்தளவு அச்சம் கொண்டிருக்கின்றது

## மகிந்த சூளுரை

என்பது ஆச்சரியமாகவுள்ளது.

ஆனால் கூட்டு எதிர்க் கட்சியினரால் ஆரம்பிக்கப் பட்ட பாதயாத்திரை கொழும்பை நோக்கி அனைத்து சவால்களையும்தடைகளையும்தாண்டிச் சென்றடையும். மக்கள் என்னுடன் இருக்கின்றனர்.

நீதிமன்றம் ஊடாக தடை விதிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

ஆனால் நீதிமன்றின் உத்தரவிற்கு கட்டுப்பட்டும் அடிபணிந்தும் எமது பாதயாத்திரையை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளோம்.

எனவே தடைகள் பல்வேறு வழிகளில் ஏற்படுத்தப்படலாம். அவற்றை வெற்றி கொள்வோம். பொதுமக்களின் நலன்கள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் ஒரு போதும் சிந்தித்ததில்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் மக்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர் கொள்கையில் வரியை அதிகரித்திருக்காது.

எமது ஆட்சியில் நாட்டின் அபிவிருத்திற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் முன்னுரிமை கொடுத்தே செயற்பட்டோம்.

ஆனால் இன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. இதனை எதிர்த்து போராடும் போது இன்னோரன்ன அவதூறுகளும் சாடல்களும் எமக்கு எதிராக முன் வைக்கப்படுகின்றன.

ஆனால் எமது இந்த பாதயாத்திரைக்கு அவை சவால்கள் அல்ல.

அனைத்து சவால்களையும் தாண்டுவோம். மக்கள் எம்முடன் உள்ளனர் என மகிந்த மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.(இ-5-7)

## மகிந்த அணியின் இரண்டாம் நாள் பாதயாத்திரை





பேராதனை பாலத்தில் இருந்து நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட, மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியின் அரச எதிர்ப்புப்பாதயாத்திரை நேற்று இரண்டாவதுநாளாககொழும்பு நோக்கி செல்லவுள்ளது.

கண்டி நகருக்குள் பேரணி நடத்தக்கூடாது என்ற நீதிமன்ற உத்தரவினால், பேராதனைப் பாலத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இந்தப் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

ஆலய வழிபாடுகளை அடுத்து தொடங்கப்பட்ட இப் பாதயாத்திரையில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பாதயாத்திரையினால், கொழும்பு- கண்டி வீதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை கடுகண்ணாவவில் இந்தப் பாதயாத்திரை நிறுத்தப்பட்டது.நேற்று காலை மீண்டும் அங்கிருந்து பாதயாத்திரை ஆரம்பமானது.

நாளை மறுதினம் முதலாம் திகதி திங்கட்கிழமை, கொழும்பை சென்றடையும் வகையில் இந்தப் பாதயாத்திரைக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-5-7)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 82

## வீட்டுத் தோட்டத்தில் பல்லாண்டுத் தாவரங்களின் அவசியம்!

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பசுமைப்புரட்சியின் அத்திவாரம் என்பது கிராமங்களின் அபிவிருத்தியே. கிராமத்து அபிவிருத்தியின் அடிநாதம் வீட்டுத்தோட்டங்களின் பேண்தகு விருத்தியே ஆகும். ஆக மொத்தத்தில் வீட்டுத்தோட்டம் என்பது நாங்கள் எதிர்பார்க்கும் இன்னொரு பசுமைப்புரட்சியினை வென்றெடுக்கும் நிறுவனமொன்றினைக் கட்டியெழுப்பும் செங்கற்களாகும். இதில் அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே நாம் எதிர்பார்க்கும் அந்த வெற்றியினை ஈட்டமுடியும். எது நல்லதோ அதனை நாம் கடைப்பிடிப்பதும் அதற்கு அனுசரணையாக இருப்பதும் நல்ல வாழ்வுக்கு அத்திவாரம். இதென்ன வீட்டுத்தோட்டம், அப்படியென்ன அபிவிருத்தி என வெறுமனே வெட்டிப்பேச்சு பேசி விமர்சிப்பவர்களும் உண்டு. எழுதும் இக்கைகள் தம்பணி உணர்ந்ததால் யதார்த்தத்தை மெய்ப்பிக்க விரிவாக இதில் விளக்கமுனைகின்றன.

முயற்சி செய்பவருக்கே இவ்வுலகம். எதுவுமே செய்யத் திராணியில்லாதவருக்காக வெறுமனே விமர்சிப்பவர்களுக்காக நாம் உண்மையாக உழைக்கும் அத்தனை நல்ல இதயங்களையும் சாடுதல் நன்றன்று. நாம் விரைந்து முனைப்பாக செயற் படவேண்டும் என்ற

நாம் வாழுகின்ற வீட்டினை சுத்தமானதாக, சுகமானதாக, மனதிற்கு , இரம்மியமானதாக, நஞ்சின்றி உணவினை உருவாக்கும் இடமாக இன்னும் பல்வகை உயிரினங்களைக் கொண்ட மகிழ்ச்சியான இடமாக ஆக்கவேண்டும். இது ஒவ்வொருவருக்குள் உள்ளார்ந்திருக்கின்ற விடயமாகும். ஆனால் இதுவரைகாலமும் வடமாகாணமெங்கும் சென்று பார்த்ததில் பலவகையான வீட்டுத்தோட்ட



அமைப்புகளைக் காணமுடிகின்றது. இது வீடு அமைந்திருக்கும் நிலப் பரப்பிற்கேற்ப, வசதிவாய்ப் பிற்கேற்ப இன்னும் அங்கி ருக்கும் மண்வளத்திற்கேற்ப மாறுபடுகின்ற போதிலும் அவற்றில் இருக்கின்ற ஒற்றுமையையும் இன்னும் வடபகுதியெங்கும் சர்வதேச நிறுவனங்களினால் மற்றும்

அலங்காரத்தாவரங்களையும் உள்ளடக்கியதாக காணமுடிகின்றது. ஒரு குறிப்பிட்ட போகத்துக்கான பயிர்களையும் இன்னும் ஓராண்டுத் தாவரங்களையும் முக்கியமாக உள்வாங்கியதால் அவற்றின் வளர்ச்சி முடிந்து அறுவடையும் செய்தபின் அந்த இடத்தில் வீட்டுத்தோட்டம் அழிந்திருந்ததை அல்லது வீட்டுத்தோட்டமே இல்லாதிருந்ததனை அவதானிக்க முடிந்தது. இன்னும் பல இடங்களில் குறைந்த எண்ணிக்கையான் பல்லாண்டுத் தாவரங்களை உள்ளடக்கிய வீட்டுத் தோட்டங்களை அவதானிக்க முடிந்தது. மாறாக குறிப்பிட்ட இடங்களில் உள்ள வீடுகளில் அதிக எண்ணிக்கையான பல்வேறு வகையான பல்லாண்டுத் தாவரங்களை

இவ்வாறான இடங்களில் வீட்டுத்தோட்டங்கள் தொடர்ச்சியாக அதன் அமைப்பை கொண்டிருந்ததனையும் பலவருடங்களாக அதன் இயற்கை வனப்பை இழக்காது தொடர்ச்சியாக பயன்தரும் இடமாக மாறியிருப்பதனையும் அவதானிக்க முடிந்தது.

வீட்டுத்தோட்டமொன்றுக்கு நிலப்பரப்பினை மட்டுப்படுத்த முடியாது. அதில் வளரும் பயிர்களை கட்டுப்படுத்தவும் முடியாது. அனைத்து தாவரங்களுக்குள்ளும் ஏதோவொரு பயன்பாடு உள்ளது. நாங்கள் அந்த பயன்பாட்டை பெறுவதை நோக்காகக் கொண்டு இயற்கையாக செயற்கை உள்ளீடுகளின்றி வளரக்கூடிய தாவரங்களை வளர்த்து அவற்றிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் பயன்படுத்தாத ஆனால் அதிக பயனுள்ள பல தாவர



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இருப்பதனைக் காணலாம். இவை தவிர பலவகை யான அவரைப்பயிர்கள், சிறுதானியங்கள், மரக்கறிப்பயிர்கள், இலை க்கறிப்பயிர்கள்,வள்ளி வகைகள், கிழங்குப் பயிர்கள், பழப்பயிர்கள் என பலவகையானவற்றை எமது சூழலில் பாரம்பரிய இனங்களாக காணலாம். அவற்றை விருத்தி செய்து அதன்மூலம் வீட்டுத்தோட்டத்தை விருத்தி செய்தால் இப்பயிர் களின் பயன்பாட்டை முழுமையாக பெற்றுக் கொள்வதுடன் பல்லா ண்டுத் தாவரங்களை விருத்தி செய்யவும் வழி கிடைக்கும்.

வீட்டுத்தோட்டத்தில் பல்லாண்டுத் தாவரங்களான தென்னை, கமுகு, மா, பலா, கொய்யா, அன்னமுன்னா, மாதுளை, அகத்தி, முருங்கை, நெல்லி, தவசிமுருங்கை, தேசி, தோடை இன்னும் பலவகையான பழவகைத் தாவரங்களையும் உள்வாங்கி வீட்டுத்தோட்டம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 99

குறிக்கோளில் வீட்டுத்தோட்டம் பற்றி இங்கே மேலதிக தகவல்களுடன் உங்களைச் சந்திக்கின்றேன். இன்றைய தலைப்பு அதற்கெல்லாம் மணிமகுடம் போர்த்தினாற் போல் வீட்டுத்தோட்டத்தில் பல்லாண்டுத் தாவரங்கள் என அமைகின்றன.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியினால் ஊக்குவிக்கப்பட்ட வீட்டுத்தோட்டங்களையும் ஆராய்ந்தபோது பல வீடுகளில் வீட்டுத்தோட்டம் என்பதனை மரக்கறிவகைகள் மற்றும் இலைக்கறிவகைகள் என்பவற்றோடு

வளர்த்து இருந்தமையினால் அந்த வீட்டுத்தோட்டம் தொடர்ச்சியாக பயன்தரக்கூடியதாகவும் இன்னும் பசுஞ்சோலையாகவும் பல உயிரினங்கள் வந்து செல்லும் பல்வகைத்தன்மை கொண்ட இனிய சூழலாகவும் அமைந்திருந்தது.

ங்கள் எமது சூழல்தொகுதியில் நிறைந்தே இருக்கின்றன. ஆனால் நாங்கள் குறிப்பிட்ட பயிர் வகைகளை வளர்த்து அவற்றையே உணவாகவும் உட்கொள்ளுகின்றோம். குறிப்பாக கத்தரி, தக்காளி, உருளைக்கிழங்கு, கோவா, வெண்டி என்பன பொதுவாக எமது உணவுக்குள்

நிலைபேறானதாக தொடர்ந்து பயன்தரக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்பெற்றால் வீட்டுத்தோட்டத்தின் பயன்பாடும் வீட்டுக்குத் தேவையான அனைத்து உணவினையும் இலகுவில் பெற்றிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் இருவருக்கு மரண தண்டனை!

மேன்முறையீடு செய்துள்ள இந்தியா

கட்டாரில் தமிழர்கள் இருவருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனைக்கு எதிராக அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசாங்கம் மேன்முறையீடு செய்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு இதனை உறுதி செய்துள்ளது. பெண் ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காக கடந்த 2012 ஆம் ஆண்டு தமிழகத்தை சேர்ந்த மூவரை கட்டார் நாட்டு பொலிஸார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அழகப்பா சுப்பிரமணி, விருதுநகரைச் சேர்ந்த செல்லத்துரை பெருமாள் மற்றும் சேலத்தைச் சேர்ந்த சிவக்குமார் அரசன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம், குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும், மரண தண்டனை விதித்து கட்டார் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதனையடுத்து கட்டார் நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் மூவரும் மேன் முறையீடு செய்தனர்.

இதில் சிவக்குமார் அரசனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை மட்டும் ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது.

மற்றைய இருவருக்கும் மரண தண்டனையை உறுதிசெய்து கட்டார் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில், இரண்டு தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக, அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசு மேன் முறையீடு செய்துள்ளது.

இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு உறுதி செய்துள்ளது. அவர்களுக்கு சட்ட ரீதியாக உதவிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5-7)

# ஆயிரக்கணக்கான சிறுவர்கள் மீது த

## சர்வதேச மனிதவுரிமை கண்

(வோஷிங்டன்)

***தீவிரவாத குழுக்களின் அச்சுறுத்தல்களின் விளைவாக ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் பலர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் மனித உரிமை கண்காணிப்பகம் கவலை வெளியிட்டுள்ளது.***

மத்திய கிழக்கு நாடுகளில் நிலைகொண்டுள்ள இஸ்லாமிய அரசு என அழைத்து கொள்ளும் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நிலை கொண்டுள் போகோஹராம் போன்ற தீவிரவாத குழுக் ளுடன் இணைந்து செயற்பட்டதான குற் சாட்டு காரணமாக அவர்கள் கைது செய்ய

## அமெரிக்க கூட்டு இராணுவம் சிரியாவில் விமானத் தாக்குதல்

### 15 பொதுமக்கள் பலி!



சிரியாவில் நிலைகொண்டுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க கூட்டு இராணுவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுத்த விமானத் தாக்குதல்களில் 15 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இந்தத் தாக்குதல்களில் சிறுவர்கள், பெண்கள் அடங்கலாக பலர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'வன்முறைகள் நிறைந்த நகரமாக இனங்காணப்பட்டுள்ள மன்பிஜ் நகருக்கு சற்றுத் தொலைவில் அமைந்துள்ள Ghandour பகுதியிலேயே குறித்த விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த தாக்குதல்கள் அமெரிக்க கூட்டு இராணுவப்படையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் குறைந்தது 15 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், சுமார் 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக அமெரிக்க கூட்டு இராணுவப்படைகள் முன்னெடுக்கும் தாக்குதல்களில் பொதுமக்கள் அதிகம் கொல்லப்படுவதாகவும், அண்மையில் மன்பிஜ் நகரில் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5-7)

## நேபாளத்தி பேருந்து க





நேபாளம் நாட்டின் தன்குடா மாவட்டத்தின் பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், முன்னாள் அமைச்சர் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேபாளம் நாட்டின் கிழக்கு தன்குடா மாவட்டத்தில் நேற்றுக்காலை மலைப்பாங்கான வீதியில்சென்று கொண்டிருந்த பேருந்து திடீரென வீதியில் இருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அந்த பேருந்தில் சுமார் 50 இற்கும் அதிக னோர் பயணம் செய்தனர். சுமார் 60 அடி ஆ பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்ததில் 13 பே பரிதாபமாக உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் அந் நாட்டின் மு

## போதைப்பொ

## இந்தோனேஷ 4 பேருக்கு ம

. போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டத குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு இந்தோனேஷி மற்றும் 3 வெளிநாட்டவர்கள் அடங்கலான பேருக்கு கொட்டும் மழைக்கு நடுவில் நேற் முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு மர தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அத பிரகாரம், 3 நைஜீரியர்கள் மற்றும் ஒரு இந் நேஷியருக்கு துப்பாக்கிப் பிரயோகம் மூல

## வேலைவாய்ப்புக்களை உருவாக்கி பொருளாதாரத்தை உயர்த்துவேன்

### ஹிலாரி கிளின்டன் வாக்குறுதி

அமெரிக்காவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிபொருளாதாரத்தை உயர்த்துவேன் என ஹிலாரி கிளின்டன் வாக்குறுதி அளித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும். இதில் ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அறிவிக்கப்பட்டார்.

பிலடெல்பியாவில் நடைபெற்ற ஜனநாயக கட்சியின் மாநாட்டில் இந்த அறிவிப்பு வெளியானது. நேற்று முன் தினம் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சி நடந்தது.

அதில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை ஹிலாரி கிளின்டன் ஏற்றுக் கொண்ட பின்னர் மேற்கண்டவாறு வாக்குறுதி அளித்தார். (இ-5-7)

## தென்கொரியத் தூதரகத்தில் வடகொரிய மாணவன் தஞ்சம்

(பியாங்யாங்)

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே தீராப்பகை உள்ளது. இந்த நிலையில், ஹொங்கொங்கில் உள்ள தென் கொரிய தூதரகத்தில் வடகொரியாவை சேர்ந்த 18 வயது மாணவன் ஒருவர் தஞ்சம் கேட்டதாக ஊடக தகவல்கள் வெளியாகின.

அவர் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் 2 வாரங்களுக்கு முன் நடந்த கல்விப்போட்டி ஒன்றில் பங்கேற்க குழுவுடன் வந்தவர் என்றும், அவர் இராணுவபின்னணிகொண்ட குடும்பத்தில் இருந்து வந்தவர் என்றும், கணித ஒலிம்பியாட் போட்டியில் கலந்து கொள்ள வந்தவர் என்றும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் இது குறித்து ஹொங்கொங்கில் உள்ள தென்கொரியத் தூதரகம் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டது. இருப்பினும் இது புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5-7)

## பலூன் மழைக்கு நடுவில் வே அறிவிப்பை ஏற்றுக்கொண்ட ஹ

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக உத்தியோகபூர்வ அறிவிப்பை பெற்றுள்ள ஹிலாரி கிளின்டன் அக்கட்சியின் அறிவிப்பை ஏற்றுக்கொள்வதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

பிலடெல்பியாவில் இடம்பெற்ற ஜனநாயகக் கட்சியின் மாநாட்டில் இறுதிநாளான நேற்று ளாக பல அரசியல் தலைவர்களும் ஹிலாரியை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக ஜனாதிபதி பராக் ஒபாமா, முதல் பெண் மிச்சேல் ஒபாமா, முன்னாள் ஜனாதிபதியும் ஹிலாரியின் கணவருமான பில்கிளின்டன் போன்றோர் உரையாற்றியிருந்தனர்.

இவர்களின் பிரசாரங்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ு தடுப்புக்காவலில் சித்திரவதை

## ண்காணிப்பகம் கவலை

நிலைகொண் அழைத்துக் அமைப்பினர் ல கொண்டுள்ள வாத குழுக்க டதான குற்றச் கைது செய்யப் பட்டு. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், ஆப்கானிஸ்தான், கொங்கோ ஜனநாயக குடியரசு, ஈராக், இஸ்ரேல், பாலத்தீனப் பிரதேசங்கள், நைஜீரியா மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், பல சிறுவர்கள் தடுப்புக்காவலின் போது உயிரிழந்துள்ளதாகவும் மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஆயுத மோதல்களின் போது குழந்தைகளின் நிலை குறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை விவாதம் நடைபெறவுள்ள நிலையில், இந்த அறிக்கை வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ந்தில் பள்ளத்தாக்கில் து கவிழ்ந்து விபத்து

## முன்னாள் அமைச்சர் உட்பட 13 பேர் உயிரிழப்பு



ற்கும் அதிகமா ர் 60 அடி ஆழ ந்தில் 13 பேர் நாட்டின் முன்னாள் அமைச்சரும் ஒருவர். அவர் தன்குடா மாவட்ட சிபின் மாவோயிஸ்ட் கட்சி தலைவர் ஹர் ராஜ் கேவா ஆவார். மேலும் 20 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (இ-7)

# மிகக்குறைந்த விலையில் இயந்திரத் துப்பாக்கிகள்

பாகிஸ்தானில் உள்ள தாரா நகரில் இயந்திரத் துப்பாக்கிகள் மிக குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

மலைகளால் சூழப்பட்ட இந்த நகரில் வசிக்கும் தொழிலாளர்கள் துப்பாக்கிகளை தயாரிக்கும் அனுபவம் கொண்டவர்கள்.


பிற நாட்டினர் பயன்படுத்தும் நவீன துப்பாக்கிகளை பார்த்தால் கூட, எவ்வித மாற்றமும் இன்றி அதேபோன்று இவர்கள் தயாரித்து விடுவார்கள்.

இவர்களிடம் இருந்தே பாகிஸ்தான் தீவிரவாதிகள் துப்பாக்கிகளை விலை கொடுத்து வாங்குகின்றனர். மேலும் மலை சூழ்ந்த இடம் என்பதால் தீவிரவாதிகளுக்கும் இது வசதியாக அமைந்துள்ளது. இந்நிலையில் அண்மைக் காலமாக தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் பாகிஸ்தான் அரசு ஈடுபட்டு வருவதால், தாரா நகரில் வியாபாரம் மந்தமாகியுள்ளது. மேலும் நாட்டிற்குள் வரும் வெளிநாட்டினரும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதால், ஏற்றுமதியும் செய்யப்படுவதில்லை.

ஆனால், பாகிஸ்தான் அரசு இந்த தாரா நகரில் இயங்கி வரும் இந்த துப்பாக்கித் தொழிற்சாலையை மூடாமல் அப்படியே விட்டுள்ளதால், இரகசிய வியாபாரம் நடந்து வருகிறது. (இ-5-7)

# பிரதமர் மோடியின் உயிருக்கு ஆபத்து

## உளவுத்துறை எச்சரிக்கை



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர், சுதந்திர தினத்தன்று உரையாற்றும் பிரதமர்கள் அனைவரும் குண்டு துளைக்காத கூண்டுக்குள் இருந்து உரையாற்றுவது வழக்கம்.

ஆனால் மோடி அதை கடைப்பிடிக்காமல் அந்த கூண்டுக்கு வெளியே உரையாற்றினார். இந்நிலையில் வரும் சுதந்திர தினத்தன்று பிரதமர் மோடி குண்டு துளைக்காத கூண்டுக்குள் இருந்து பேச வேண்டும் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகள் தவிர, ஹிஜ்புல் முஜா ஹுதீன், லஷ்கர் - இ - தொய்பா, ஜெயிஸ் - இ - முகமது உள்ளிட்ட பல தீவிரவாத அமைப்புகள் பிரதமர் மோடிக்கு குறி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-5-7)

# யானை வீசிய கல்லால் சிறுமி உயிரிழப்பு

## மிருகக்காட்சிச்சாலையில் பயங்கரம்



மொராக்கோ நாட்டின் ரபாட் மிருகக்காட்சிச்சாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யானையொன்று கல் வீசித் தாக்கியதில் தலையில் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 7 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.

சிறுமி பார்வையாளர் பகுதிக்குள் நின்றிருந்த போதே குறித்த யானை பாரிய கல்லொன்றினை வீசியுள்ளது. இதன்போது எடுக்கப்பட்ட காணொலி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த காணொலியில், சிறுமியை தாக்கிய யானை, வீசப்பட்ட கல் போன்றன காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், தலையில் பலத்த காயத்துடன் இரத்தம் வழிய காணப்படும் சிறுமிக்கு சிலர் முதலுதவி சிகிச்சை அளிப்பது போன்ற காட்சிகளும் அடங்கியுள்ளன.

முதலுதவி வழங்கப்பட்டதன் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி சில மணி நேரங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளாள். (இ-5-7)

## ப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு

# னஷியாவில் கொட்டும் மழையில் த மரண தண்டனை நிறைவேற்றம்

ல் ஈடுபட்டதாக தோனேஷியர் அடங்கலான 4 டுவில் நேற்று ள்ளிரவு மரண ள்ளது. அதன் ம் ஒரு இந் தோ யோகம் மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.


இதேவேளை மொத்தமாக 14 பேருக்கு மரண தண்டனை நேற்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி நிமிடத்தில் 10 பேருக்கான மரண தண்டனை இடைநிறுத்தப்ப ட்டுள்ளது.

இந்த மரண தண்டனைக் கைதிகளில் இந்தியர், பாகிஸ்தானியர், சிம்பாவே போன்ற நாட்டவர்கள் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்த போதும், கடந்த புதன்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பின் பிரகாரம், நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 14 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டது.

இருந்த போதும், குறித்த 14 பேரில் 4 பேருக்கு மாத்திரமே நள்ளிரவில் தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், ஏனையோருக்கு இடை நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து தெளிவுபடுத்தப்படவில்லை. இதேவேளை, குறித்த மரண தண்டனைக்கு சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களிடம் இருந்து பெரும் கண்டனங்கள் வெளியிடப்படுகின்ற போதிலும், அந்நாட்டு மக்களால் இந்த சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# வெட்பாளர் ட ஹிலாரி



முன்தினம் மேடைக்கு அழைக்கப்பட்டிருந்த ஹிலாரிக்கு பலூன்கள், காகிதத் துண்டுகள், மின்சார விளக்குகள் ஒளிர பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இங்கு உரையாற்றிய ஹிலாரி, 'உலகம் நம்மை பார்த்துக்கொண்டு இருக்கின்றது. அமெரிக்காவின் விதியை தீர்மானிக்கும் பொறுப்பு நம்முடையது. நாம் ஒற்றுமையாகவும் வலுவானவர்களாகவும் இருக்க வேண்டும்' என்று கூறியபடி கூடியிருந்தவர்களின் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் தனது உற்சாகப் பேச்சை முடித்துள்ளார். (இ-5-7)

# ரஷ்யாவுடன் தென்சீனக் கடலில் சீனா கூட்டுப் போர்ப்பயிற்சி

ரஷ்யாவுடன் தென் சீனக்கடல் பகுதியில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடப்போவதாக சீனா அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய தென் சீனக்கடலில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஆனால் அதில் பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருனே, தாய்வான் போன்ற நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் தொடர்ந்த வழக்கில், ஐ.நா. சட்ட திட்டத்தின்படி செயற்படும் சர்வதேச தீர்ப்பாயம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்பில், "தென் சீனக்கடலில் சர்ச்சைக்குரிய பகுதியில் சீனா வரலாற்று உரிமைகள் கோருவதற்கு சட்டரீதியில் எந்த முகாந்திரமும் இல்லை" என கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்த தீர்ப்பை சீனா நிராகரித்து விட்டது.

இந்த நிலையில் ரஷ்யாவுடன் தென் சீனக்கடல் பகுதியில் கூட்டு போர் பயிற்சியில் ஈடுபடப்போவதாக சீனா அறிவித்துள்ளது. இந்த பயிற்சிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது. இரு தரப்பு இராணுவ உறவுகளை வளர்த்துக்கொள்ளும் விதத்திலும், கடல் சார் அச்சுறுத்தல்களுக்கு பதில் அளிக்கும் விதத்திலும் இந்த பயிற்சியை நடத்தப்போவதாக சீன இராணுவ செய்தி தொடர்பாளர் யாங் யுஜுன், பீஜிங்கில் தெரிவித்தார்.

அதேநேரத்தில் இது மூன்றாம் நபர்களுக்கு எதிரானது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்திலும் சீனாவும், ரஷ்யாவும் கூட்டு போர் பயிற்சியில் ஈடுபட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கேலிச்சித்திரம்

# தாயைக் கொன்ற தனயனுக்கு 8 ஆண்டுகள் கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

கல்முனை சம்மாந்துறையில் 68 வயது நிரம்பிய தாயாரை தடியால் அடித்து கைமோசக் கொலை செய்த தனயனுக்கு, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எட்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம்கடந்த 2010 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. சாரதா தேவி என்ற பெண்ணே கொல்லப்பட்டவராவார். கனகசிங்கம் சிவகுமார் என்பவருக்கு எதிராக சட்டமாஅதிபரால் கல்முனை மேல் நீதிமன்றத்தில் கொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பர்தம நீதியரசரின் விசேட நியமனத்தின் அடிப்படையில் கல்முனை மேல் நீதிமன்றத்தில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், இந்தக் கொலை வழக்கில் நேற்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்துள்ளார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி லாபிர் சாட்சிகளை நெறிப்படுத்தினார். எதிரி தரப்பில் சட்டவாதி லியாகத் அலி நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

மரணமடைந்த சாரதா தேவியை 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி. எதிரி கிளிசூரியா தடியாலும் பனைமட்டையாலும் அடித்து கொலை செய்ததாக கண்கண்ட சாட்சிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர்.

இறந்தவரின் தலை, கழுத்து, நெஞ்சு, அடிவயிறு மற்றும் எலும்புகளில் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் சிறந்தளவு கூர் கொண்ட மொட்டையான ஆயுதத் தாக்குதல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என மருத்துவ பரிசோதனை நடத்திய வைத்தியர் சாட்சியமளித்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து எதிரி கனகசிங்கம் சிவகுமார் எதிரிக் கூண்டில் நின்று வாக்கு மூலமளித்தார்.

நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது எனது தாய் கெட்ட வார்த்தைகளால் என்னைப் பேசினார். எனக்குக் கோபம் வந்தது. அந்தக் கோபத்தில் வேலியில் இருந்த கிளிசூரியா தடியைப் பிடுங்கி இரண்டு மூன்று முறை அம்மாவை அடித்தேன். அடித்ததும் அவர் மயங்கிவிட்டார். அதன் பின்னர் தண்ணீர் எடுத்து வந்து அவருடைய முகத்தில் தெளித்தேன்.

ஆனால் அவர் எழும்பவில்லை. எனது தாயார் என்னை கெட்ட வார்த்தைகளினால் பேசி கோபப்படுத்தியதால் தான் திடீரென அம்மாவைத் தாக்கிவிட்டேன் என குற்றத்தைஒப்புக்கொண்டு வாக்கு மூலமளித்தார்.

அதேவேளை, எதிரி தரப்பு சட்டத்தரணி எதிரி மீது கருணை காட்டுமாறு கருணை விண்ணப்பம் செய்தார்.

விசாரணைகளின் முடிவில் திடீர்க் கோபம் காரணமாக இடம்பெற்ற கைமோசக் கொலையாக இக்கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் எனினும் இந்த வழக்கில் பல விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டு மேற்படி தீர்ப்பை வழங்கினார். (இ-5)

## 15 இலங்கை மாணவர்களுக்கு சீனா புலமைப்பரிசில் வழங்குகிறது

(கொழும்பு)

15 இலங்கை மாணவர்களுக்கு சீன புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. உயர் கல்வியைத் தொடர்வதற்காக 15 இலங்கை மாணவர்கள் சீனாவிற்கு பயணம் செய்ய உள்ளனர்.

ஆயிரம் மாணவர்கள் புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பம் செய்திருந்தனர் எனவும் அதில் 15 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கலை உள்ளிட்ட துறைகளில் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவுள்ளனர். ஐந்து ஆண்டுகள் சீனா வில் தங்கியிருந்து மாணவர் கள் கல்வியைத் தொடரவுள்ளனர். (இ-5-7)

28.07.2016 அன்று வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் - 2 இன் 13 ஆம் கேள்விக்கான விடைகள்

ஆதர் சி.கிளாக், அநாகரிக தர்மபால, கலாபோஜி ஆனந்த குமாரசுவாமி, சேர் பொன்.இராமநாதன்.

## திருநெல்வேலியில் இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 77 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருநெல்வேலிக் கிளையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ



யாழ்.உடுவில் மகளிர் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.இதன் போது நிகழ்வின் விருந்தினர்களான தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி டி.எஸ். தியாகராஜா , உடுவில் மகளிர் கல்லூரியின் முகாமையாளர் க்லாநிதி திருமதி தியாகராஜா ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் பேராயர் கலாநிதி டி.எஸ். தியாகராஜா உரை நிகழ்த்துவதையும் மதுரைப் பெண்கள் கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மார்க்கெற் மங்கொவினா மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.



பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நாவலர் பாலர் சோலை ஞானக் குழந்தை இல்ல விளையாட்டு விழா அண்மையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை ஆசிரியை திருமதி சுதாகரன் தேவிகா தலைமையில் இடம் பெற்ற போது...



பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரசடி ஞானக் குழந்தை இல்லத்தின் 49 ஆவது வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த பாதயாத்திரையால் பிளவை ஏற்படுத்த முடியாது

## அமைச்சர் சாகல அறிக்கை

(கொழும்பு)

**மகிந்த பாத யாத்திரை நடத்துவதன் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இடையிலான பிணைப்பை தகர்க்க முடியாது என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.**



கூட்டு எதிர்க்கட்சியின் பாத யாத்திரை தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் பாத யாத்திரையினால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான உறவில் கடுகளவும் விரிசல் ஏற்படவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வலுவான அரசியல் பிணைப்பை தகர்க்க சில தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாக அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிக்கு அமைய அரசாங்கம், பாத யாத்திரைக்கு பூரண பாதுகாப்பு வழங்கும்.

ஊழல் மோசடிக்காரர்களினால் ஏமாற்றப்பட்ட போராட்டக்காரர்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

கடந்த அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கம் போராட்டங்களை குழப்ப முயற்சிக்காது. குண்டர் கூட்டங்களைக் கொண்டு நாச வேலைகளிலும் ஈடுபடாது.

எமக்கு தெரிந்த வகையில் ஊழல் மோசடிக்காரர்களினால் செய்யப்படும் ஓர் கண்கட்டி வித்தையாகும். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள எடுக்கும் முயற்சியாகவே இந்த பாத யாத்திரை நோக்கப்பட வேண்டும்.

எவ்வாறெனினும் ஜனநாயகத்தையும் சட்டம் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்எந்தவொரு போராட்டக்காரருக்கும் நாட்டின் சட்டத்தை மீறிச் செயற்பட அனுமதியளிக்கப்படாது. நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்யும் அதேவேளை, சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியது அவசியமானது என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-7)

# பாதயாத்திரையில் பங்கேற்பதானது மூழ்கும் படகில் ஏறுவதற்கு நிகரானது

## அமைச்சர் முஸ்தபா தெரிவிப்பு



கூட்டு எதிர்க்கட்சியின் பாத யாத்திரையில் பங்கேற்பதானது மூழ்கும் கப்பலில் ஏறுவதற்கு நிகரானது என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாத யாத்திரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்பது மூழ்கும் கப்பலில் பங்கேற்பதற்கு நிகரானது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவின் அனுமதியின்றி இந்த பாத யாத்திரையில் பங்கேற்கின்றார்கள் என்றால், அவர்கள் அனைவரும் கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிப்பவர்களாகும்.

சுதந்திரக் கட்சியில் உருவாகி பின்னர் அதற்கு துரோகம் இழைப்பவர்கள் நன்றாக இருக்க முடியாது.கட்சியை அழிக்க முயற்சித்த பலர் இல்லாமல் போயுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் வரலாறே இதற்கு சான்று பகர்கின்றது.எவ்வளவு ஆட்களைக் கொண்டு வந்தாலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது.

நாடாளுமன்றில் கணித ரீதியாக பார்த்தாலும் ஆளும் கட்சிக்கு மிகப் பெரிய பலம் காணப்படுகின்றது.பாத யாத்திரையானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நடத்தப்படுவதல்ல.

சுதந்திரக் கட்சியின் மூலம் நன்மை பெற்றுக்கொண்ட சில வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுதந்திரக் கட்சியை அழிக்க முயற்சிக்கின்றனர்.

தற்போதைய ஜனாதிபதியே கட்சியில் ஜனநாயகத்தை நிலைநாட்டினார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-7)

# அன்று இளைஞர்களை சுட்டுக்கொன்றவர்கள் இன்று பாதயாத்திரை செல்கின்றனர்-ரஹ்மான்

பாத யாத்திரை சென்ற இளைஞர்களை சுட்டுக்கொலை செய்தவர்கள் இன்று பாத யாத்திரை செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கு, பாத யாத்திரை செல்வதற்கு அனுமதியளிக்காது இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி கொலை செய்து, அடக்கியவர்கள் இன்று பாத யாத்திரை செல்கின்றார்கள்.

ஏகாதிபத்திய ஆட்சி நடத்தியவர்கள் இன்று ஜனநாயகம் பற்றிப்பேசுகின்றார்கள்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பாத யாத்திரை செல்வதற்கு மட்டுமன்றி பேசுவதற்கு சுதந்திரம் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் பாத யாத்திரை சென்றவர்கள் சுடப்பட்டனர்.

எமக்கு கோட்டையில் கூட்டம் நடத்த இடமளிக்கப்படவில்லை.ஷிராணி பண்டாரநாயக்க, சரத் பொன்சேகா வழக்கு விசாரணைகளை பார்வையிடச் சென்ற எம்மை பாதாள உலகக் குழுவினரைக் கொண்டு தாக்கினார்கள்.

இன்று அவ்வாறான சூழ்நிலைகள் கிடையாது.பாத யாத்திரையை தடுத்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தினர் மேம்பாட்டு நிகழ்வு நடைபெறவிருந்த காரணத்தினால் முரண்பாடுகள்.மோதல்களை தவிர்க்கும் நோக்கில் இந்த நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது ஜனநாயகத்தை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.இது அடக்கு முறையல்ல.

அந்தக் காலத்தில் இவ்வாறு நடக்கவில்லை. ரத்துபஸ்வலவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

ரொசான் சானக்க என்ற இளைஞர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கண்டியிலிருந்து கொழும்பு மட்டுமன்றி கதிர்காமம் வரையிலும் இன்று பாத யாத்திரை செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-7)

# இன்று ஒரு தகவல்

## இரைந்து பேசலாமா?

வளமான –பலமான குரலை உடையவர்கள் அப்படிப்பட்ட தங்கள் குரலுக்காக சந்தோஷப்படலாம், பெருமைப் படலாம், தவறில்லை.

ஆனால்அதைப்பயன்படுத்துவதில்தான் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

ரயிலில் அத்தனை பேரும் படுத்துவிட்டதும் கம்பார்ட் மண்டே அலறுகிற மாதிரி அரசியலையும் வீட்டுவிவகாரங்களையும் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கும் ஆந்தை மனிதர்களைக் காணும் போது எனக்கும் பலரைப் போலவே பற்றிக் கொண்டு வரும்.

எனக்கொரு நண்பன் உண்டு.அவன் என்னோடு பள்ளியிலும் கல்லூரியிலும் படித்தவன்.அவனைப் பொது இடங்களில் , நான்கு பேர் நடுவே சந்திக்கவோ அவன் அருகில் நிற்கவோ யாருமே அஞ்சுவார்கள். காரணம், சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பற்றிக் கவலைப்படாமல் எல்லோருக்கும் கேட்கும் படியாக மானத்தை வாங்குகிறமாதிரியானகேள்விகளைக்கேட்பான்.

எவ்வளவு கெஞ்சினாலும் மிரட்டினாலும் குரலைத் தாழ்த்தாமல் தன் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் என்கிற அடிப்படையில் உரக்கப் பேசுவான்.

அவன் நோக்கம் அல்லது அடிமன ஏக்கம் எல்லாம் எல்லோர் கவனத்தையும் தன் பக்கம் இழுக்க வேண்டும் என்பது தான்.எல்லோரும்தன்னைக்கண்டுகொள்ள வேண்டும் என்ற இந்த மனப்பான்மை ஒரு விதத்தில் மனோ வியாதியின் வகையைச் சேர்ந்ததே.

நம் விடயங்கள் பிறருக்குத் தேவையில்லாமல் தெரிய வரும் போது அவை நமக்கு எதிராக வேலை செய்வதைப் பலர் உணர்வதில்லை.

நம்மைக் கவர்ந்தவர்களின் பட்டியலை நாம் புரட்டிப் பார்ப்போமேயானால் அதில் நமக்கு உதவியவர்கள், நம்மை மதித்தவர்கள் ஆகியவர்களோடு அமைதியாகப் பேசுபவர்களும் நிச்சயம் இடம் பெற்றிருப்பார்கள்.

ஆர்ப்பாட்டமாகப் பேசுவதாலும் இரைந்து பேசுவதாலும் மட்டுமே காரியங்களைச் சாதிக்க முடியும் என்று எண்ணுவது தவறு. பெரும்பாலான காரியவாதிகள் அமைதியாக செயற்படுபவர்களே.

இரைந்து பேசுபவர்கள் ஒரு சாதாரண விடயத்தைச் சொன்னாலும் அதை மற்றவர்கள் கோபமாகப் பேசுவதாகப் புரிந்து கொள்கிறார்கள். அதனால் வேதனையோ வெறுப்போ தான் மிஞ்சுகிறது.

ஜீரணிக்க முடியாத விடயங்களைக் கூட அமைதியாகப் பேசுபவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி சொல்கிறார்கள்.

ஒலியின் வீரியம் எந்த வடிவத்தில் உயர்ந்தாலும் அது மனிதனை எரிச்சல் கொள்ளச் செய்கிறது.இதை இரைந்து பேசுபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரைந்து பேசலாமே?

ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

எப்போது?

தொலைபேசி சரிவர வேலை செய்யாத போது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் தற்போது நவீன சாதி முறைமை

## சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பில் நவீன சாதிமுறைமை காணப்படுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த காலங்களில் சாதி முறைமை காணப்பட்ட போதிலும் பின்னர் அது வழக்கொழிந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ள அவர், எனினும் தற்போது கொழும்பு போன்ற பகுதிகளில் நவீன சாதிய முறைமை அமுல்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

தாய் பாலியல் தொழிலாளி என்றால் மகளையும் பாலியல் தொழிலாளி என்ற பிரிவிற்குளளும், தந்தை ஆட்டோச் சாரதி எனறால் மகனும் ஆட்டோச சாரதி பிரிவிற்குள் உள்ளடக்கப்படுகின்ற நிலையுளளது எனவும் அவர் தெரிவிததுள்ளார்

கொழும்பில் சேரிகளில் வாழ்ந்து வரும் மக்களிடையே இந்த நிலைமை காணப்படுகின்றது என குறிப்பிட்ட அவர், மக்களின் வறுமையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர்தெரிவித்துள்ளார். (இ-5-7)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-29.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.04 | 147.68 |
| பிரிட்டன் | பவுண்ட் | 189.27 | 195.69 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.64 | 164.68 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.07 | 151.95 |
| கனடா | டொலர் | 108.92 | 113.27 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.48 | 112.32 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.25 | 110.18 |
| இந்தியா | ரூபா | 2.1731 | ------- |
| சீனா | யுவான் | 21.9000 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.4932 |
| குவைத் | டினார் | 481.9663 |
| ஓமான் | ரியால் | 378.5577 |
| கட்டார் | ரியால் | 40.0249 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8621 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6816 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 80 | 100 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 400 | 500 | 400 | 400 | 400 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 200 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 80 | 100 |
| கோவா | 140 | 180 | 100 | 160 | 150 | 160 | 140 |
| கரட் | 160 | 200 | 130 | 200 | 150 | 160 | 150 |
| பூசணி | 80 | 100 | 60 | 100 | 80 | 100 | 100 |
| புடோல் | 50 | 100 | 60 | 60 | 70 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 150 | 100 | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 300 | 110 | 240 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 50 | 60 | 60 | 80 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | 200 | — | 140 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 100 | 60 | 60 | 80 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 | 120 | 130 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 50 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 150 | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 160 | 150 | 200 | 400 |
| போஞ்சி | 180 | 200 | 130 | 160 | 170 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | 80 | 100 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 20 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 100 | 120 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — | — | 150 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 130 | 160 | 160 | 200 | 200 |
| முள்ளங்கி | 30 | 100 | 20 | 60 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 60 | 30 | 60 | — | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அமைச்சர் கண்ணிவெடிக்கு பலி! 239

### தடை

கடந்த 1997ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தை வெளிநாட்டு தீவிரவாத அமைப்பு என அறிவித்து அமெரிக்கா தடை விதித்தது. கடந்த 2001ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் இயக்கத்தை சர்வதேச தீவிரவாத இயக்கங்கள் பட்டியல் சேர்த்தது.

### சொத்து முடக்கம்

இந்நிலையில் அமெரிக்காவில் உள்ள தமிழர் மறுவாழ்வு அமைப்பு என்ற விடுதலைப்புலி ஆதரவு அமைப்பின் சொத்துக்கள் அனைத்தையும் அமெரிக்க அரசு முடக்கி உள்ளது.இந்த அமைப்பு ஒரு தொண்டு நிறுவனமாகும். ஆனால் இந்த நிறுவனம் விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டுதல், ஆயுதம் கடத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்க அரசு குற்றம் சாட்டியது.எனவே தீவிரவாத இயக்கங்களையும் அவற்றின் ஆதரவு அமைப்புக்களையும் நிதி ரீதியாக தனிமைப்படுத்தும் நோக்கத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக அமெரிக்க அரசு தெரிவித்தது.

இத்தகவல்கள் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருந்தன.

### வரவேற்பு

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். விடுதலைப்புலி ஆதரவு அமைப்பு மீது உறுதியான நடவடிக்கை எடுத்த முதல் வெளிநாடு அமெரிக்காதான் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ரோகித போகல்லகாமா தெரிவித்துள்ளார்.

◆ ◆ ◆ ◆ ◆

கொழும்பு நகரில் நடந்த கண்ணிவெடி தாக்குதலில் அமைச்சர் தசநாயகேவும் அவருடைய பாதுகாவலரும் பலியானார்கள்.

விடுதலைப்புலிகளுடன் 2002ஆம் ஆண்டு செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசு 03-01-2008அன்று இரத்து செய்தது.ஆனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை வரிக்குவரி பின்பற்ற தயாராக இருப்பதாக நோர்வே தூதுக்குழுவுக்கு விடுதலைப்புலிகள் கடிதம் எழுதினர்.போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர்.ஆனால் விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அரசு நிராகரித்தது. இது குறித்து அமைச்சரும் பாதுகாப்பு செய்தித்தொடர்பாளருமான ஹெகலிய ரம்புக்வெல கூறியதாவது,

### வேடிக்கையாக உள்ளது

விடுதலைப்புலிகள் தங்களைப் பயன்படுத்தி கொள்வதற்கு போர் நிறுத்தத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்து தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வந்தனர். இந்த அடிப்படையில் பார்க்கும் போது விடுதலைப் புலிகளின் கோரிக்கை வேடிக்கையாக உள்ளது. எனவே அவர்கள் சொல்வது போல போர் நிறுத்தத்தை புதுப்பிக்க முடியாது.இவ்வாறு அவர் கூறினார்.

### கண்ணி வெடி- தாக்குதல்

இந்நிலையில் 08-01-2008 அன்று காலை நடந்த ஒரு கண்ணிவெடி தாக்குதலில் அமைச்சர் ஒருவர் கொல்லப் பட்டார். அவரது பெயர் டி.எம் தசநாயகே. 54 வயதான இவர் தேசிய புனரமைப்பு அமைச்சராக இருந்து வந்தார்.

பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக திசநாயக 8ஆம் திகதி காலை கொழும்பு நகருக்கு காரில் சென்று கொண்டிருந்தார்.அவரது காருக்கு முன்னும் பின்னும் பாதுகாப்பு வாகனங்கள் சென்றன.

முற்பகல் 10.30 மணி அளவில் கொழும்பில் இருந்து 19 கிலோமீற்றர் தூரத்தில் கொழும்பு கட்டுநாயக்க சாலையில் நகரத்தின் முக்கிய வீதியில் அமைச்சர் திசநாயக கார் சென்று கொண்டிருந்தது. ருக்குமணிதேவி சந்திப்பு என்ற இடத்தில் அவரது வாகனமும் அதைத் தொடர்ந்து சென்ற வாகனங்களும் போன போது பூமியில் புதைத்து வைக்கப்பட்டு இருந்த சக்தி வாய்ந்த கண்ணிவெடிகள் பயங்கர சத்தத்துடன் வெடித்தன.

### அமைச்சர் பலி

இதில் அமைச்சரின் காரும் உடன் சென்றவர்களின் காரும் பலத்த சேதம் அடைந்தன.





அமைச்சர் திசநாயக அவரது பாதுகாவலர், சாரதி உட்பட 12 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் 5 பேர் பொதுமக்கள்.

உடனடியாக 12பேரும் அருகில் இருந்த ராகம மருத்துவக் கல்லூரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் வைத்தியர்களில் அமைச்சரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. 2 மணி நேரம் அளிக்கப்பட்ட சிகிச்சை பலனின்றி அமைச்சர் திசநாயக 12.30மணியளவில் பரிதாபமாக மரணம் அடைந்தார்.

### பாதுகாவலரும் மரணம்

அமைச்சர் மரணம் அடைந்த சிறிது நேரத்தில் அவரது பாதுகாவலரும் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்தார்.

திசநாயக புத்தளம் மாவட்டத்தில் இருந்து எம்.பியாக தேர்ந்து எடுக்கப்பட்டவர். ஐக்கிய மக்கள் விடுதலை கூட்டணியில் இருந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். கேபினட் அமைச்சராக இல்லாவிட்டாலும் மகிந்தராஜ பக்ஷ அரசாங்கத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைச்சர்களில் ஒருவராக இருந்தார்.

### விடுதலைப்புலிகள்

விடுதலைப்புலிகள்தான் கண்ணிவெடிகளை புதைத்து வைத்து ரிமோட்கண்ட்ரோல் மூலம் வெடிக்கச் செய்து உள்ளனர் என்று இராணுவ செய்தித்தொடர்பாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார் .

ஆனால் விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து இந்தத் தாக்குதல் பற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. அரசு போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்த பிறகு விடுதலைப் புலிகள் நடத்திய முதல் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. 2008ஆம் ஆண்டுக்கான முதல் பாராளுமன்ற கூட்டம் 8-1-2008 அன்று காலையில் தொடங்கியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரியவின் அலுவலகத்தால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையால் தமது அமைப்புக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தேசிய வியாபார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான கடிதம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும், தமது அமைப்பு சட்டரீதியாக பதிவு செய்யப்பட்ட ஒன்றென்றும், தமது அமைப்பு தொடர்பில் சபாநாயகரின் ஊடகப்பிரிவிற்கு தெரியாதமை ஆச்சரியமளிப்பதாகவும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பாராளுமன்றில் தயாரிக்கப்படும் உணவுகள் விஷத்தன்மையான பாம் எண்ணெய் மூலம் தயாராவதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் தேசிய அமைப்பு அண்மையில் தெரிவித்திருந்தது.

எனினும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் பாராளுமன்றில் உணவு தயாரிப்புக்கு விஷம் கலந்த பாம் எண்ணெய் பயன்படுத்துவதாக தெரிவித்து ஊடகங்களுக்கு வழங்கியுள்ள தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என்றும் சபாநாயகர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (இ-5-7)

# உறவு நிலைத்திருக்கும் பிரதமர் மோடி உறுதி

(கொழும்பு)

இந்தியா-இலங்கை இடையேயான உறவு எப்போதும் நிலைத்திருக்கும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா சார்பில் 50.61 கோடி ரூபாய் செலவில் புதிய அம்புலன்ஸ்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் தொடக்க விழா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதற்கு பிரதமர் நரேந்திரமோடி வீடியோ செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில் அவர் கூறியிருந்ததாவது.

இந்தியா உதவியுடன் இலங்கையின் பல பகுதியில் பல்வேறு திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தியா- இலங்கை இடையேயான உறவு எப்போதும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு மோடி தெரிவித்துள்ளார். (இ-7-10)

# சம்பள அதிகரிப்பை வழங்காவிட்டால் கம்பனிகளுக்கு கடும் சிக்கல் ஏற்படும்

## அமைச்சர் செனவிரத்ன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தினால், தனியார் ஊழியர்களுக்கு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்ட 2,500 ரூபாய் சம்பள உயர்வை வழங்காத தனியார் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன, தொழிற்சங்க ஆணையாளர் நாயகத்துக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார். தனியார் ஊழியர்களுக்கான 2,500 ரூபாய் சம்பள உயர்வு நடைமுறையானது கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. இந்நிலையில், தனியார் ஊழியர்களுக்கான 2ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பினை நடைமுறைப்படுத்தல் வேண்டும். நடைமுறைப்படுத்தப்படாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் மற்றும் முதலாளிமார்கள் குறித்த சட்ட உறுப்புரையில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி காலம் தாழ்த்திய வண்ணம் உள்ளதாக தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளன. (இ-5-7)

# பொலிஸாரை கடுமையாக விமர்சித்த விமல்



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரை நேற்று முன்தினம் காலை பெரதெனியாவில் ஆரம்பமாகி மாவனெல்ல நகருக்கு அண்மித்த பகுதியில் முடிவடைந்தது.

இதன்போது அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பொலிஸாரையும் பொலிஸ்மா அதிபரையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் சீருடையைக் கழற்றி, சிறுவர்களிடம் வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

பாதயாத்திரையின் போது அம்புலன்ஸ் வண்டி தாக்கப்பட்டதாக சில ஊடகங்கள் பொய்யான செய்தியை பரப்பின. ஆனால் அவ்வாறான எநதவொரு தாக்குதலும் அங்கு இடம்பெறவில்லை என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடந்த பாதயாத்திரையின் போது பொலிஸார் வேடிக்கை பார்த்து கொண்டிருந்ததாகவும், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவே போககுவரத்து பொலிஸாரின் கடமைகளை செய்ததாகவும் விமல் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே கடமைகளை செய்ய முடியாத பொலிஸாருக்கு சீருடை எதற்கு என்றும், அதனை கழற்றி சிறுவர்களுக்கு வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதாக வீரவனச தெரிவித்துள்ளார். (இ-5-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 794

### அனு அனுஜன்



ஒரு சின்னப்பொண்ணு சிவன் கோயிலுக்கு போய் சாமி எனக்கு ஒரு சைக்கிள் வேணும்னு வேண்டிக்கிச்சு. ஆனா 10 நாள் ஆகியும் இந்தப் பொண்ணுக்கு சைக்கிள் கிடைக்கல. 11 ஆவது நாள் அதே கோயிலுக்கு அந்தப் பொண்ணு வந்துச்சு. வாசல்ல இருந்த சின்னப் பிள்ளையார் சிலைய யாருக்கும் தெரியாம எடுத்திட்டு உண்டியலில ஒரு லெட்டர் ஒன்றை போட்டுபோயிடுச்சு... அந்த லெட்டர்ல என்ன எழுதியிருந்ததுன்னா?இன்றைக்கு நைட்டுக்குள்ள சைக்கிளோட என் வீட்டுக்கு வந்தீன்னா உன் பையன நான் உன்கிட்ட ஒப்படைக்கிறேன்...
இல்லேன்னா மேட்டர் பினிஷ்.

### சிந்து




### தர்சி




### சர்மி சர்மிளா



அடி கிறுக்கிப் பயபுள்ள

### உஷாந்தன் நெய்மார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குயிலின் குரல் இரகசியம்!

முன்னொரு காலத்தில் ஒரு அரச குமாரனும், ஒரு குடியானவனின் மகனும் இணை பிரியா நண்பர்களாக இருந்தனர். ஒருநாள் இருவரும் படகில் ஏறி அருகில் ஓடிக் கொண்டிருக்கும் நதியில் ஒரு ஜாலிடிரிப் அடிக்க தீர்மானித்தனர். குடியானவரின் மகன் வேலு புல்லாங்குழல் வாசிப்பதில் வல்லவன். இவனின் இசையில் மயங்கித் தான் அரச குமாரன் ரவீண், இவனிடம் நட்புக் கொண்டான் என்பது உண்மை.

டேய் வேலு! நான் படகை மெதுவாக செலுத்துவேன். நீ அதற்கு ஏற்ப, அந்த சூழலை கவரும் வண்ணம் உன் புல்லாங்குழலிலிருந்து இசையெழுப்ப வேண்டும்," என்றான். வேலுவும் ஒப்புக் கொண்டான். படகில் செல்லும் போது ரவீண், வேலுவின் இசையில் மயங்கி தன் இஷ்டப்படி இலக்கு ஏதுமின்றி படகை செலுத்த, திடீரென இடியும், மின்னலும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ள, வானக் கூரை பிய்ந்து, "சோ' வென்று மழை பெய்து, வெள்ளம் பெருக்கெடுத்தது. சிறுவர்களின் படகு இரண்டாய் பிளந்து திசைக்கு ஒன்றாக அடித்து செல்லப்பட்டது. வேலுவின் கையிலிருந்த புல்லாங்குழலும் வெள்ளத்தோடு போய் விட்டது.

வேலுவின் உடைந்த படகு ஒரு தீவில் போய் ஒதுங்கியது. படகை விட்டு இறங்கி தீவினுள் காலை வைத்தவனுக்கு ஒரே அதிர்ச்சி. ஏனெனில் அங்கே அப்படியொரு மயான அமைதி. ஆங்காங்கே சின்னச் சின்ன வீடுகள் நிறைய இருந்தும், மனிதர்கள் இருப்பதற்கான அறிகுறி எதுவுமே இல்லை. வெகு நேரம் சுற்றிச் சுற்றி வந்தவனுக்கு ஏதோவொரு வீட்டினுள்ளிருந்து யாரோ அழும் குரல் கேட்டது.

அந்த அழுகுரல் வந்த இடத்தை அடைந்தான். அந்தோ பரிதாபம் இரண்டு சின்னஞ்சிறு சகோதரிகள் அழுகையினூடே தங்களின் நிலையை கூறினர்.

"பத்து நாட்களுக்கு முன் எங்கிருந்தோ எங்கள் ஊரினுள் நுழைந்த ஒரு மலைப்பாம்பும், ஒரு பெரிய கழுகும் போட்டி போட்டுக் கொண்டு ஊரிலுள்ள அனைவரையும் ஒருவர் விடாமல் தின்று தீர்த்து விட்டது. நாங்கள் இருவர் மட்டுமே பாக்கி. எங்களையும எப்போ முழுங்க வருமோ? தயவு செய்து எங்களை காப்பாற்றுங்கள்!" என்று கதறினர்.

அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியே சென்றவன், ஊருக்கு வெளியே வயிறு முட்ட முட்ட ஜனங்களை முழுங்கிவிட்டு, தன் நிலை மறந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த மலைப்பாம்பையும், அதே நிலையில் இருந்த அந்த பெரிய கழுகையும் கொன்றான். பின்னர் கரையோரத்தில் கட்டப்பட்டிருந்த மற்றொரு பெரிய படகில் அந்த இரண்டு சகோதரிகளையும் ஏற்றிக் கொண்டு, தன் நண்பனைத் தேடிப் புறப்பட்டான்.



இவனின் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் சிறிது தூரத்திலிருந்த மற்றொரு தீவில்தான் அலைந்து கொண்டிருந்தான் அவனின் நண்பன் ரவீண். நண்பனைக் கண்டதும் அவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

அந்த தீவிலும் ஜன சந்தடியே இல்லை. இந்த மலைப்பாம்பிற்கும், அதனின் நண்பனான கழுகிற்கும் பயந்து போன அந்த தீவில் வசித்து வந்த ஜனங்கள், ஒரேயடியாக அவ்விடத்தை காலி பண்ணி விட்டு வேற்றிடம் சென்று விட்டனர். அவர்கள் விட்டுச் சென்ற வீடுகளில் சில வீடுகள் வசதியாகவே இருந்தன.

ரவீண் தன் நண்பன் வேலுவிடம், "நாம் இனி இங்கேயே குடியேறி விடலாம்!" என்று சொல்ல வேலுவும் சம்மதித்தான். மூத்த சகோதரியை ரவீணும், இளைய சகோதரியை வேலுவும் திருமணம் செய்துக் கொண்டனர்.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. ரவீண் மனதில் கெட்ட எண்ணம் குடிகொள்ள ஆரம்பித்தது. அவனுக்கு வேலுவின் மனைவியின் மேல் ஒரு கண். எப்படியாவது வேலுவை அழித்துவிட்டு அவளை தன் உடமையாக்கிக் கொண்டு விட வேண்டும் என்று தீர்மானித்தான்.

அதன்படியே ஒருநாள் வேலு வெளியே சென்றிருந்த தருணத்தில், தன் மனைவியைக் கொன்று பூமிக்கடியில் எறிந்துவிட்டு, வேலுவின் மனைவியை அணுகி தன்னை மணந்து கொள்ளுமாறு கேட்டபோது, அவள் மறுத்துவிட, அவளை இழுத்துப்போய் வெகு தூரத்திலுள்ள ஒரு காட்டில், ஒரு பெரிய மரத துடன் சேர்த்து கட்டிவிட்டு, ஒன்று மறியாதவனைப் போல் வீடு வந்து சேர்ந்துவிட்டான்.

ரவீண் அவனின் மனைவியை எறிந்த இடம் பூமிக்கடியிலுள்ள எறும்பு அரசனின் ஆளுகைக்குட்பட்ட இடமாகும். இறந்து கிடந்த அப்பெண்ணின் உடலைக் கண்டு பதறினான் எறும்பு அரசன். இப்பெண்ணின் தந்தையும் அவனும் நல்ல நண்பர்கள். தன் சேவகர்களை கூப்பிட்டு இப்பெண்ணை கொலை செய்தவனை தேடிப்பிடித்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான்.

வீடு திரும்பிய வேலு, தன் மனைவியை காணாமல் உடனே ரவீணிடம் சென்று தன் மனைவியைப் பற்றி கேட்க, "எனக்கு என்னடா நண்பா தெரியும்? என் மனைவியையும் தான் காணவில்லை. ஒருவேளை இருவரும் வேறு எங்கேனும் ஓடி விட்டார்களோ என்னவோ" என்று ஒரேயடியாக சாதித்துவிட்டான்.

தன் மனைவியைத் தேடி வேலு மிக வேகமாக அலைந்து கொண்டிருந்த வேளையில், எறும்பு அரசனின் சேவகர்களின் கண்ணில் இவன்பட, ஓடிச் சென்று அவனை அப்படியே ஒரு அமுக்காக அமுத்திப் பிடித்து தங்கள் அரசன் முன் நிறுத்தினர்

(தொடரும்...)

## 07.2016 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1502 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவது கடற்பயணத்தின் போது கொந்துராசை அடைந்தார்.
- 1629 - இத்தாலியில் நேப்பிள்சில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1733 - ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது விடுதலைக் கட்டுநர் லாட்ஜ் ஆரம்பிககப்பட்டது.
- 1756 ரஷ்யாவின் அரசி எலிசபெத்தின் வேண்டுதலுக்கிணங்க கட்டிடக் கலைஞர் பார்த்தலோமியோ ராஸ்ட்ரெல்லி கத்தரீன் அரண்மனையைக் கட்டி முடித்தார்.
- 1825 - பசிபிக் கடலில் மால்டன் தீவு கண்டு பிடிக்கப்பட்டது.
- 1930 - உருகுவே முதலாவது உதைபந்தாட்ட உலகக்கிண்ணப் போட்டி இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்டீனாவை 4-2 கணக்கில் தோற்கடித்து உலகக்கிண்ணத்தை வென்றது.
- 1932 - கலிபோர்னியாவில் 10வது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாயின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஐ-58 அமெரிக்காவின் கடற்படைக் கப்பலை மூழ்கடித்ததில் 883 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 1954 - எல்விஸ் பிறீஸ்லி முதற்தடவையாக பொது மேடையில் பாட ஆரம்பித்தார்.
- 1966 - உதைபந்தாட்ட உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி மேற்கு ஜெர்மனியை 4-2 என்ற கணக்கில் வென்றது.
- 1971 - அப்பல்லோ 15இல் சென்ற டேவிட் ஸ்கொட் மற்றும் ஜேம்ஸ் ஏர்வின் இருவரும் லூனார் ரோவர் வாகனத்துடன் சந்திரனில் இறங்கினர்.
- 1971 - ஜப்பானில் இரண்டு விமானங்கள் வானில் மோதிக் கொண்டதில் 162 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - பிரான்ஸ், மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிடம் இருந்து வனுவாட்டு விடுதலை பெற்றது.
- 1997 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் "திரெட்போ" என்ற இடத்தில் இடம்பெற்ற மண்சரிவில் 18 பேர் கொல் லப்பட்டனர்.

### பிறப்புகள

- 1818 - எமிலி புறொண்டி, ஆங்கில நாவலாசிரியர். (இ. 1848)
- 1863 - ஹென்றி ஃபோர்ட், அமெரிக்கத் தொழிலதிபர். (இ. 1947)
- 1947 - ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர், நடிகர், அரசியல்வாதி.

### இறப்புகள்

- 1969 - இ. சி. இரகுநாதையர், இலங்கையில் வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டவர்.
- 2003 - கே. பி. சிவானந்தம், வீணை வாத்திய கலைஞர். (பி. 1917)

### சிறப்பு நாள்

- வனுவாட்டு - விடுதலை நாள். (1980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் ஆரம்பித்த பாதயாத்திரை ரோதை யாத்திரையாக மாறிவிட்டது

(கொழும்பு)

நாட்டில் நடந்து முடிந்த ஜனவரி 8ஆம் திகதி தேர்தலில் தோல்வியை தழுவிக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியை கைப்பற்ற நடத்தப்படும் கண்டி பாதயாத்திரை ரோதை யாத்திரையாக மாறிவிட்டது.

பாதயாத்திரை என்றால் நடந்தே செல்ல வேண்டும். மகிந்தவுக்கு வயது 70 ஆகியதால் வாகனத்தில் யாத்திரையாக செல்கின்றாரா? என வடமத்திய மாகாண சபை உறுப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க கேள்வி எழுப்பினார்.

மஸ்கெலியா கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கடன் சுமை, வரிச்சுமை மற்றும் வீழ்ச்சியடையும் பொருளாதாரம் என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டததில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.(இ-5-7)

# 2500 பெற்றுக்கொடுத்த நல்லாட்சி அரசுக்கு நன்றி



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால கொடுப்பனவாக 2500 ரூபாவை பெற்றுக் கொடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியோருக்கும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் நன்றியை தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் நேற்று ஹற்றன் புருட்ஹில் தோட்டத் தொழிலாளர்கள் ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் ஹற்றன் மல்லியப்பு பகுதியில் பதாகைகளை ஏந்திய வண்ணம் மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தி நன்றியை தெரிவித்தனர். (இ-5-7)

# காணாமற்போனோர் சான்றிதழ் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

யுத்தத்திற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் பல்வேறு செயற்பாடுகளினால் காணாமற்போனவர்களை காணாமற்போனோர் என்று உறுதிசெய்து அதற்கான சான்றிதழை வழங்கும் நடவடிக்கை இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும்என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து வடக்கு, கிழக்கு மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டிருக்கும் நிலையில் கூட்டமைப்பினருடன் கலந்துரையாடி அவர்களது யோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படும் என்று அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

பொலநறுவையில் முன்னெடுக்கவுள்ள நடமாடும் சேவை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள உள்விவகார அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் வஜிர அபேவர்த்தன, காணாமற்போன ஊடகவியலாளர்களுக்கும் காணாமற்போனமையை உறுதிசெய்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளவும் முடியும் என்றும் தெரிவித்தார்.

'காணாமற்போனோர் சான்றிதழுக்கு காணாமற்போனோர் சான்றிதழ் என்றே பெயரிடப்பட்டுள்ளதோடு இதனடிப்படையிலேயே சான்றிதழும் வழங்கப்படும். இந்த நடவடிக்கையை ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் என்பன இணைந்து குறித்த பணியக நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளன. காணாமற்போனோர் பணியகம் அமைக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலகங்கள், மாவட்ட பதிவாளர்கள், உள்விவகார அமைச்சு, கிராம அலுவலர்கள் ஊடாக சான்றிதழுக்கான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

நாட்டில் இல்லாத ஒரு நபர் காணாமற் போயிருப்பதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர் சில சந்தர்ப்பத்தில் படகு மூலமோ அல்லது வேறு வழியிலோ பிறநாட்டிற்கு சென்றிருக்கலாம்.

இவ்வாறான சூழ்நிலையில் ஏனைய சாட்சியங்கள், ஆதாரங்களின் அடிப்படையிலேயே தீர்மானம் எடுக்க முடியும். முறைப்பாடு கிடைக்கின்ற சந்தர்ப்பத்திலேயே காணாமற்போனதை உறுதி செய்ய முடியாது.

எனவே கிராம அலுவலர்கள் ஊடாக அதிகாரிகளின் மூலம் முறைப்பாடு உறுதிப்படுத்தப்படும்.

அதற்காகவே காணாமற்போனோர் பணியகம் அமைகப்படும். இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிராமப் புறங்களில் தகவல்கள் முன்வைக்கப்படும். இதில் பிழையான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக 5 வருட சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் இதற்கான சட்டம் கூறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5-7)

# மறுசீரமைப்பை ஏற்படுத்தும் பொறுப்பு அரசிற்கு மாத்திரம் உரியது அல்ல

## சுவிஸ் தூதுவர் கூறுகிறார்

மறுசீரமைப்பை ஏற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு மாத்திரம் உரியது அல்ல என சுவிட்சர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் ஹெயின்ஸ் வோகர் நெடர்கோர்ன் தெரிவித்துள்ளார்.

இதற்கான பொறுப்பு அனைத்து தரப்பினருக்கும் இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுவிஸ்இராஜதந்திர உறவுகளின் 60 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் மறுசீரமைப்புக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். தற்போதுள்ள இளைஞர்கள் யுத்த சூழ்நிலைக்கு முகம் கொடுக்காமல் வாழ்வதற்கான வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

இந்த நிலையில் [illegible] போதுள்ள சூழ்நிலையை பயன்படுத்தி யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கி, மீண்டும் அவ்வாறான நிலை ஒன்று ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்என்று அவர்மேலும் தெரிவித்தார். (இ-5-7)

# செய்தித்துளிகள்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்.ஆவரங்கால் சிவன் ஆலயத்தின் பர்வதவர்த்தனி அம பாள் ஆலய மஹோற்சவம் கடந்த 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர் வரும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 6 ஆம் திகதி திருக்கல்யாண பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. தினமும் இரவு 7 மணி முதல் அம்பிகையின் அருளாட்சி எனும் தலைபபில் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் தொடர் சொற்பொழிவாற்றி வருகின்றார். (இ-5)

## நீரிழிவை வெற்றிகொள்வோம் நலம் காக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகமும் வட மாகாண அமையமும் யாழ்.மாவட்ட நீரிழிவுக் கழக முதியோர் நலன் விரும்பிகளும் ஒன்றிணைந்து நடத்தும் நீரிழிவை வெற்றி கொள்வோம் எனும் நலம் காக்கும் கருத்தரங்கு இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 161, முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை) யாழ்ப்பாணம் எனும் முகவரி யில் அமைந்துள்ள யாழ்.சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் வரவேற்புரையினை இணைச்செயலாளர்கள் வீ.ஸ்ரீசக்திவேல், க.கமலசேகரம் ஆகியோரும் தலைமையுரையினை உப தலைவர் எஸ்.பரமநாதனும் வழங்குவர். முதியோர் பத்திரிகை வெளியீடும் இடம்பெறும். தொடர்ந்து நீரிழிவை வெற்றிகொள்வோம் எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி ரீ.சந்திரகுமாரன் நிகழ்த்துவார். (இ-3)

## பறையிசை நடனக்குழு கலைஞர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட YARL ENTERTAINMENT இன் தொன்மம் கலைக்குழுவின் பறையிசை நடனக்குழு புதிய கலைஞர்களை உள்வாங்க தயாராகின்றது. இப் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்கள் 077 248 7861, 077 844 9744, 077 172 7649 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது Thonmamkalaikkulu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான 50 ஆவது ஆண்டு விளையாட்டு விழா

ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் முழுமையான ஆதரவுடன் யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான 50 ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அகில இலங்கை சமாதான நீதவான் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக கல்விக் காருண்யன் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர். (இ-3)

## பீ.பி.ஜயசுந்தரவுக்கு ஆணைக்குழு அழைப்பு

நிதி மற்றும் பொருளாதார. அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர நேற்று பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையின் அனுமதி பெறப படாமல் "லக் சதோச" வுக்கு இந்தியாவிலிருந்து ஒரு இலட்சம மெட்ரிக் தொன் அரிசி கொண்டுவர ஐந்து பில்லியன் ரூபாய தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், வாக்கு மூலமை பெற்றுக்கொள்ளவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.(இ-5)

## சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெரேசியா பகுதியில் கெசல்கமுவை ஓயாவின் அருகாமையில் சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைதத இரகசிய தகவலின்படி நேற்று முன்தினம் இரவு ஹற்றன விசேட பொலிஸ்பிரிவினரால்கைது செய்யப்பட்டதுடன். மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்திய பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-5-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற் விவகாரத்தை அலட்சியப்படுத்தியதால் வந்துள்ள தலைவலி!

"நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து ஓராண்டு பூர்த்தியடைய இன்னும் சில வாரங்களே எஞ்சியுள்ள இந்த வேளையில் ஆளும் கூட்டணிக் கட்சிகள் இரண்டுக்குமே சோதனைக் காலம் வந்திருக்கிறது. நெருக்கடி நிலைமைகளை சமாளிப்பதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் மென்மையான போக்கும் கருத்துச் சுதந்திரத்துக்குக் கொடுக்கப்படும் அதீத சுதந்திரமும் மக்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்காக கிளரந்தெழ வசதியான களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது எனலாம்.

இதில் தற்போது சூடு பிடித்துள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) விவகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் தேவையில்லாத நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது.

மத்திய வங்கிக்கு புதிய ஆளுநரை நியமிக்கும் விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனையே தொடர்ந்தும் அந்தப்பதவியில் வைத்திருக்க விரும்பினார். ஆனால், ஜனாதிபதி மைததிரிபால சிறிசேனவோ வேறு ஒருவரைத்தான் நியமிக்கவேண்டுமென விரும்பினார். இந்த இழுபறியையடுத்து புதிய ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்பட்டார். அதியுயர் கல்வித்தகுதி உள்ளவராகவும் நிதி சார்ந்த வட்டாரங்களில் கௌரவ அந்தஸ்தில் உள்ள ஒருவராகவும் இந்திரஜித் குமாரசுவாமி பார்க்கப்படுகிறார். எனவே, இந்தப் பதவியில் அவர் பாரபட்சமின்றி பணியாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



"ஒரு பிரச்சினை முடிந்து விட்டது"" என அரசாங்கம் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த வேளையில், வேறொரு வீக்கமாக முளைத்திருக்கிறது 'வற்' அதிகரிப்பு. இந்தப் பிரச்சினையை அரசாங்கம் மிக இலேசாக தவிர்த்திருககலாம். ஆனால் அரசாங்கத்தின் பலவீனத்தால் மகிந்த ஆதரவு அணி இதைப் பெரிதாக நீட்டி முழங்கி மக்கள் தற்போது அனுபவிக்கும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் 'வற்' ஒரு புதிய வரி என்ற தோற்றப்பாட்டை உருவாக்க பிரசாரம் மேற்கொண்டு வருகின்றது.

இதனால் 'வற்' என்ற ஒரு புதிய வரியை அரசாங்கம் விதித்திருப்பதனாலதான் பாவனைப் பொருட்களின் விலைகள் ஏறிவிடடன என மககள் இப்போது நினைக்கிறார்கள். ஆனால், இந்த 'வற்' வரி கடந்த அரசாங்க காலத்திலும் இருந்தது. அப்போது அது குறைந்த வீதத்தில் விதிக்கப்பட்டிருந்தது. பதினான்கு சதவீதமாக இருந்த 'வற்' வரி தற்போது பதினைந்து வீதமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதுதான் உண்மை. இந்த உணமையை அரசாங்கம் மக்களுக்கு எடுத்துக் கூறத் தவறியதால் தான மக்களின் எதிர்ப்பு மேலோங்கி வருகிறது. அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் இந்த வரி குறித்துப் பேசுகிறார்கள். ஆனால் அவர்களில் எத்தனை பேர் இது பழைய வரி தான் என இதுவரை கூறியிருக்கிறார்கள் என்பது கேள்விககுரிய விடயம்.

இதுபோதாதென்று அரசாங்கம் தகுந்த சட்டமியற்றலின்றி அதிகரிக்கப் பட்ட 'வற்' வரியை மே 2ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த தீர்மானித்தமை அது செய்த மற்றொரு பிழை. இதனால் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுடன் மற்றும் ஐவர் நீதிமன்றம் சென்றனர். இவர்களது வழக்கை ஆராய்ந்த உச்சநீதிமனறம 'வற்' வரி மட்டுமல்ல தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியையும் மே 2ஆம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக இடைக் காலத் தடை ஒன்றை விதித்தது.

இதை அடுத்து விடயம் விபரீதமாகிறது என்பதைப் புரிந்து கொண்ட பிரதமர அலுவலகம் 'வற்' மற்றும் 'தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி' என்ற இந்த இரண்டு வரிகளிலும் செய்யப் பட்ட திருத்தங்கள் விரைவில் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கை வெளியிட்டது.

(தொடரும்...)

# தமிழ் சினிமா வரலாறு

## தேர்தலில் சிவாஜி தோல்வி 220

அப்போது ஜெயலலிதா தலைமையில் ஒரு அணியாகவும் ஜானகி அம்மாள் தலைமையில் ஒரு அணியாகவும் அ.தி.மு.க. பிளவு பட்டு இருந்தது.

தி.மு.கழகம், இ.காங்கிரஸ் ஆகியவை தனித் தனியாகப் போட்டியிட்டன. எனவே 4 முனைப்போட்டி நடந்தது.

**ஜானகி அணியுடன் சிவாஜி கூட்டு**

ஜானகி அம்மாள் அணியுடன் சிவாஜிகணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணி கூட்டுச் சேர்ந்தது.

இந்த கூட்டணிக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டம் திருவையாறு தொகுதியில் போட்டியிட்ட சிவாஜிகணேசன் தோல்வி அடைந்தார்.

இந்த தொகுதியில் தி.மு.க.வேட்பாளர் வெற்றி பெற்றார். ஓட்டு விபரம், துரை சந்திரசேகரன் (தி.மு.க.) 36,981, சிவாஜிகணேசன் (த.மு.மு.) 26,338, ஆறுமுக கொண்ண முண்டார் (இ.காங்) 14,346, ஆழி.கோ.மருதையன் (ஜெ.அணி) 13,435, முருகேசன் (நெடுமாறன் கட்சி) 270.

**ஏமாந்து போனேன்**

தேர்தலில் போட்டியிட்டது பற்றியும் தோல்வி அடைந்தது பற்றியும் அரசியலில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியும் பிற்கால [illegible]கணேசன் மனம் திறந்து கூறினார்.

அவர் கூறியதாவது, அண்ணன் எம்.ஜி.ஆர். இறந்த பின் ஜானகி அம்மாள் சில நாட்கள் முதலமைச்சராக இருந்தார்.

அப்போது சட்டமன்றத்துக்கு தேர்தல் வந்தது. ஜானகி அம்மையார் அணியும் நானும் ஒன்றாகத் தேர்தலில் நின்றால் ஜெயித்துவிடலாம் என்று பலபேர் கூறினார்கள். அது போலவே நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தோம்.

**தயக்கம்**

இருந்தாலும் எனக்குத் தேர்தலில் நிற்பதற்கு தயக்கம் இருந்தது. ஏனென்றால் நான் கட்சி ஆரம்பித்து மிகக் குறைந்த நாட்கள் தான் ஆகியிருந்தன. கட்சியானது அப்போது முழுமையாக வளர்ச்சி அடைந்து மக்களின் நம்பிக்கையை பெற அவகாசம் இல்லை.

எனவே நான் சற்றுத் தயங்கினேன். ஆனால் என்னைச் சுற்றியுள்ளவர்கள் என்னிடம் வந்து நாங்கள் மக்களிடத்தில் நமது கட்சியைப் பற்றிக் கேட்டோம். எல்லா இடங்களிலும் நமது கட்சி நன்கு வளர்ந்திருக்கிறது. கிராமங்களில் எல்லாம் காங்கிரஸ் கொடிக்குப் பதிலாக உங்கள் கொடிதான் பறக்கிறது என்று கூறியவுடன் எனக்கு உச்சி குளிர்ந்துபோய் விட்டது. என்னை ஒரு மாயையில் சிக்க வைத்து எனக்கு சோப்புப் போட்டுவிட்டார்கள். எனது தலையில் பெரிய ஐஸ்கட்டியைத் தூக்கி வைத்துவிட்டார்கள். நானும் ஆகா! என்று ஏமாந்து விட்டேன். என்னையே நான் ஏமாற்றிக் கொண்டேன்.



நமக்கும் மேலாக ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் அல்லவா? எதுவாயினும் அவன்தானே தீர்ப்புச் சொல்ல வேண்டும். அவனை மீறி நாம் எதைச் செய்தாலும் அது தீங்காகவே தானே முடியும்.

அப்படித்தான் எனக்கும் நடந்தது. நான் தேர்தலில் நிற்கிறேன் என்றதும் 50 சீட் கொடுத்தார்கள். என் சொந்தப் பணத்தையும் மற்றும் வங்கியில் வாங்கிய கடன்களையும் வைத்துக் கட்சிக்காக செலவழித்தேன்.

நல்லவர்கள் எச்சரிக்கை

பிற கட்சிக்காரர்களில் நல்லவர்கள் சிலர் இருந்தனர். அவர்கள் என் பிள்ளைகளிடம் வந்து அப்பாவை கட்சி ஆரம்பிக்க சொல்லாதீர்கள் என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால் என் பிள்ளைகளோ நல்ல பிள்ளைகள் அவர்கள் வந்தவர்களிடம் அப்பா இதுவரை தனக்கென எதுவுமே கேட்டதில்லை. கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் என்ன செய்தாலும் தடுக்க மாட்டோம். சொத்துக்களையே விற்றாலும் அதைப்பற்றி நாங்கள் கவலைப்பட மாட்டோம். எதுவாக இருந்தாலும் அவர் இஷ்டப்படியே செய்யட்டும் என்று கூறிவிட்டார்கள்.

அதைப்போல் நானும் என் இஷ்டப்படி தான் செய்தேன். தேர்தலில் நின்றேன். தோல்வி அடைந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல, அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாங்கள் மௌனமாக இருப்பது அவர்களை மௌனமாக்கும்

என் அருமைத் தமிழ் அரசியல் தலைமைக்கு மூத்த தமிழன் எழுதும் அன்பு மடல் இது.

வயதின் முதிர்ச்சி உடல் உள கேள்விக்கு ஊக்கம் கொடுக்காதிருந்தும் தமிழ் என்றவுடன் உடம்பில் ஏதோவொரு இனம்புரியாத உற்சாகம். ஆதலால்தான் இந்தக் கடிதத்தை என் தள்ளாத வயதிலும் உங்களுக்கு எழுதுகிறேன்.

எனதருமை தமிழ் அரசியல் தலைவர்களே! உங்களால் எங்கள் இனத்திற்கு ஏதேனும் கிடைக்கும் என்று நம்பினேன். அந்த நம்பிக்கை என் அந்திமகாலத்துக்குள் நடக்கும் போல் தெரியவில்லை.

2016வரைக்கும் என் மூச்சைக் காப்பாற்றிக் கொள்வேன் என்ற உறுதி என்னிடம் உள்ளது.

இருந்தும் என் சகோதரர் சம்பந்தர் சொல்லியபடி 2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு கிடைத்து விடும் என்றால், நான் என் பிராணனை பிடித்து வைத்திருப்பதில் அர்த்தம் இருக்கும்.

2016இல் தீர்வு காணப்படவில்லை என்றால் பிறகு 2017 என்று எவரும் சொல்ல முடியாது.

ஆகையால் 2016 முடிய என் பிராணனுக்கு விடை கொடுக்கவே விரும்புகிறேன். இருந்தும் ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். அருணகிரி நாதர்... சும்மா இரு சொல்லற என்றாலுமே அம்மா பொருள் என்றும் அறிந்திலேன் என்று பாடியுள்ளார்.

இதுகாணும் அந்தப் பாட்டின் பொருளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தென்பகுதியில் ஒரு பெரும் பேரணி ஒன்று நடக்கிறது. நல்லாட்சியைக் கவிழ்க்க வேணும் என்றுதான் பேரணி நடப்பதாக கேள்வி.

இவ்வாறான பேரணிகள் தென்பகுதியில் நடக்கும் போது நாங்கள் அமைதியாக இருக்க வேணும் மக்கள்.

நாங்கள் இசகு பிசகாகக் கதைக்க அதைப் பேரினவாதிகள் தமக்குச் சாதகமாக்கிப் போடுவினம்.

'எங்கட தம்பி மாவை சேனாதிராஜா கொஞ்சம் அவசரப்பட்டு போனார் போல.

தமிழ் மக்களின்ர கோரிக்கைக்கு நல்லாட்சி அரசாங்கம் செவி சாய்த்து வருகின்ற நிலையில, அதற்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையிலும் இன நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையிலும் பொது எதிரணியின் ஏற்பாட்டில் தென்பகுதியில் பாதயாத்திரை நடைபெறுகின்றது. இதை தோற்கடிக்க வேண்டும்.

இப்படித் தம்பி மாவை சொன்னதாக செய்திகள் வெளிவந்திருக்கு.

இப்படியான கருத்துக்களை நாங்கள் சொன்னால், பொது எதிரணி அதை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு பாதயாத்திரைக்குச் சிங்கள மக்களை சேர்த்துப் போடும்.

மகிந்த ராஜபக்ஷவின் பாதயாத்திரையைப் பார்த்தனீங்கள் தானே! என் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சனங்கள் நிற்பதாக தெரிகிறது.

ஆகையால் தம்பியவ அங்க என்ன நடந்தாலும் அது பற்றி நாமள் அவசரப்பட்டு கருத்துத் தெரிவிக்காமல் எங்கட அலுவல்களை முதலில பார்ப்பம்.

அது சரி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கையைப் பார்த்திருப்பியள் என்று நினைக்கிறன் அவற்ற கையில சிவ சின்னமான உருத்திராட்சம் கட்டப்பட்டிருக்குது.

அவருக்கு கடவுள் நம்பிக்கையும் அதிகம் போல; உருத்திராட்சம் சக்தி மிக்கதுதானே அன்னை இந்திரா காந்தியும் உருத்திராட்ச மாலை போட்டுக் கொண்டு தானே பாரத பூமியை ஆட்சி செய்தவர்.

ஆகையால் மக்கள் நீங்களும் கடவுள் நம்பிக்கையோடு நடவுங்க அதற்கு முதலில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையாக இருங்கள்.

ஏதோ எங்கள் தந்தை செல்வநாயகம் சொன்னவர் கடவுள்தான் தமிழரைக் காப்பாற்ற வேண்டும் என்று. அந்த நம்பிக்கையிலதான் நானும் இருக்கிறன் தம்பியவ.

# அபயம் அளிக்கும் அபிராமி அன்னை

உலக மாதாவாகப் போற்றப்படும் உமை இந்தப் பிரபஞ்சத்தையே படைத்து காத்து மீண்டும் தனக்குள்ளே ஒடுக்கி அருள் பாலிப்பவள். உயிர்கள் மீது வைத்த கருணையினால் ஒவ்வொரு வகையான பெயர்களோடும் வடிவத்தோடும் ஒவ்வோர் இடங்களில் எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றாள். தில்லையில் சிவகாமியாகவும் திருக்கடவூரில் அபிராமியாகவும் காஞ்சியில் காமாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் மாத்தளையில் முத்துமாரியாகவும் நயினையில் நாகபூஷணியாகவும் வண்ணையில் வீரமாகாளியாகவும் சாவகச்சேரி வாரிவனத்தில் முத்துமாரியாகவும் இன்னும் பலபல இடங்களிலும் அருள் பாலிப்பதைக் காண்கிறோம்.

புண்ணிய பூமியான இலங்கைத் திருநாட்டின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடக்கே ஏழு பெரிய ஆலயங்கள்பழைமையாகக் கொண்ட ஏழாலைப் பகுதியில் அவதரித்தவரே இன்று உலகம் போற்றும் டென்மார்க் பிராண்டாபதி அபிராமி உபாசகித் தாயாவார்.

தாயாரின் பக்திப் பிரவாகத்தால் அபிராமியே அவரிடம் குடிகொண்டு பேசும் தெய்வமாக இன்று பல்லாயிரக்கணக்கான அன்பர்களின் மனக்கவலைகளை நீக்கி மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி வருகின்றார். அபிராமி உபாசகித் தாய் அன்பே சிவம் எனும் தாரக மந்திரத்திற்கேற்ப மக்கள் சேவையே மகேசன் சேவையென அபிராமியின் திருவளைத் தன் அடியவருக்கு பெற்றுக்கொடுத்து பலரைப்பல இன்னல்களிலிருந்து காப்பாற்றி வருகின்றார்.

அபிராமிக்கு டென்மார்க்கில் பெரிய ஆலயம் அமைந்தது மட்டுமன்றி இன்று லண்டன், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா நாடுகளிலும் அபிராமி உபாசகித் தாயின் பிரார்த்தனைக் கோயில்கள்அமைத்து ஞாயிறு வாரம்தோறும் தாயின் திருவடிக்கு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, அர்ச்சனை நடைபெற்று பஜனைப் பாடல்கள் பாடி வழிபாடுகள் நடத்தி அருள் பெற்று வருகின்றார்கள்.

இலங்கையிலும் அம்மையார் அவதரித்த ஏழாலையிலும் வவுனியா நொச்சி மோட்டையிலும் பிரார்த்தனைக் கோயில்கள் அமைத்து வழிபாடுகள்நடைபெறுவதோடு இன்னல்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

பசுமாடுகள், கோழிக் குஞ்சுகள், தையல் மெஷின், நீர்ப்பம்பிகள் குடும்பப் பெண்களுக்கு வழங்குவதோடு மாணவர்களின் கல்வியை முன்னேற்றும் வகையில் கற்றல் உபகரணங்களையும்திருவருளோடு இணைத்து வழங்கி வருகின்றார்.

கடந்த 21ஆம் திகதி டென்மார்க்கில் அபிராமி ஆலயத்தில் கொடியேற்றம்நடைபெற்று 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 31ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது.



இக்காலத்தில் எல்லா நாடுகளிலும் அபிராமி அடியார்கள் கூடிப் பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம் என்ற நிலையில் அபிராமித் தாயின் வழிபாடுகள் உலக நாடுகள் பலவற்றிலும் பரவி வருகின்றது சிறப்புக்குரியதாகும்.

சைவச் சொற்பொழிவாளர்
செ.கந்தசத்தியதாசன்

# சிரியாவில் மேலும் ஒரு கிராமம் ஐ.எஸ்.தீவிரவாதிகள் வசம்

## 24 பேர் வெட்டிப் படுகொலை

(டமாஸ்கஸ்)

சிரியா மற்றும் ஈராக் நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றி அட்டூழியத்தில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவில் மேலும ஒரு கிராமத்தை கைப்பற்றி அங்குள்ள 24 பேரை வெட்டிக் கொன்றுள்ளனர்.

சிரியாவின் வடக்கு பகுதியான மன்பிஜ் நகரின் அருகாமையில் உள்ள புயிர் என்ற கிராமத்துக்குள் நேற்று முன்தினம் புகுந்த ஐ.எஸ். தீவிரவாதிகள், அந்த கிராம த்தை தங்கள் கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அங்கு வசித்துவந்த 24 பேரை அவர்கள் வெட்டிக் கொன்றதாகவும் பெய்ருட் நகரில் உள்ள சிரியாவுக்கான சர்வதேச மனிதவுரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## மக்கள் வங்கிக் கிளையின் சேவை நிலையத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மக்கள் வங்கிக்கிளையின் கொக்குவில் சேவை நிலையத்திறப்பு விழா நாளை மறுதினம் முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப 8.30 மணிக்கு இல. 205/4 கே.கே.எஸ். வீதி , குளப்பிட்டிச் சந்தி கொக்குவிலில் இடம் பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் என்.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## பான்ஏசியா வங்கி சம்மான கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முன்னோடி வங்கிகளில் ஒன்றான பான் ஏசியா வங்கி- ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சம்மான எனும் கடன் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இந்த கடன் திட்டத்தின் சிறப்பம்சமாக பொறுப்புக்களோ பிணைகளோ எதுவும் இன்றி குறைந்த ஆவணங்களுடன் இலகுவாக பெறக்கூடியதாக இருபதே.

இக் கடன் திட்டம் குறித்த தகவல்களை விபரிப்பதற்கான கருத்தரங்கு ஒன்று நாளை 31ஆம் திகதி உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என பான் ஏசியா வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.(ச)

## 15 ரூபாய் விவகாரத்தில் உபியில் தம்பதி படுகொலை

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் மது அருந்த பணம் தராத தம்பதியை நபர் ஒருவர் அரிவாளால் வெட்டி கொலை செய்துள்ள சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தர பிரதேசத்தின் குற்ரா என்ற பகுதியில் இச் சம்பவம் நடந்துள்ளது. அப் பகுதியில் உள்ள சாலை ஓரத்தில் வித்தைகாட்டி பிழைப்பை நடத்தி வந்துள்ளனர் பரத் நாட் மற்றும் அவரது மனைவி மமதா ஆகியோர்.

அப்போது அந்த பாதையில் வந்த அசோக் மிஸ்ரா என்பவர் இந்த தம்பதியிடம் மது அருந்த வேண்டும் இருக்கும் பணம் போதவில்லை 15 ரூபாய் தர வேண்டும் என கேட்டு நிர்பந்தித்துள்ளார்.

இதற்கு அந்த தம்பதி மறுபபு தெரிவிக்கவே அசோக் மிஸ்ராவுடன் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த மிஸ்ரா அரிவாளால் அந்த தம்பதிகளை வெட்டி சாய்த்துள்ளார். இதில் இரத்த காயத்தில் சாய்ந்த அந்த கணவன் மனைவி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த பொலிஸார் உடனடியாக அந்த உடல்களை மீட்டு உடற்கூறு பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனிடையே கொலை செய்துவிட்டு தப்பிக்க முயன்ற மிஸ்ராவை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-7)

## முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபரின் வீட்டில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரின் வீட்டில் இருந்து ஆயுதங்கள் சில, குண்டு துளைக்காத ஆடை, துப்பாக்கி ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக வீரமுகெதர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, முன்னாள் பொலிஸ்மா அதிபரின் வாக்குமூலத்தை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை, மணலடைப்பு ஸ்ரீ அண்ணமகேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் வ.தருமராசா தலைமையில் நடைபெறும். (இ-3)


## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை ஞாயிற் றுக் கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில் ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து சத்திரச் சந்திவரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மாகாந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரிய கடை வீதி, நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, தச்சன் தோபபு, மட்டுவில், சரசாலை, கல்வயல், பனைவள ஆராய்ச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட், மிக்சர் பிளான்ட், போதனா வைத்தியசாலை, யாழ். கொமர்ஷல் வங்கி, யாழ். தேசிய சேமிப்பு வங்கி, யாழ். இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகா தாரத் திணைக்களம், கார் கில்ஸ் பூட் சிற்றி, யாழ். வைத்தியசாலை (மூன்று மாடிக் கட்டடத் தொகுதி), அபி கட்டடம், யாழ்.விடுதி, பல்கலைக்கழக தங்கு விடுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில தெனியங் குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆதிவிநாயகர் கோவில் பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமுருகன் வி.கழகம் நடத்தும் மென்பந்தாட்டச் சுற்றுத்தொடர்

## அட்டகிரி வெற்றி



மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் சென்.ஜோசப் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அட்டகிரி விளையாட்டுக்கழகம் மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 7விக்கெட் இழப்பிற்கு 46 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்கு 46 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அட்டகிரி விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 4விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்.ஜோசப் அணிவீரர் டிலான் தெரிவானார். இவர் 28 ஓட்டங்கள் பெற்று வெற்றியை பெற்றுக்கொடுத்தார். (க)

# அச்சுவேலி யூத் வி.கழகத்தை வீழ்த்தி கலைமதி இறுதிப் போட்டிக்கு தெரிவு

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் A பிரிவுக்கான கரப்பந்தாட்ட அரையிறுதி போட்டியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் அச்சுவேலி யூத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் போட்டியிட்டது.

இப்போட்டி கலைமதி விளையாட்டுக்கழகம் 3:0 எனும் செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

25:19,25:23,25:17 என்ற செற்கணக்கில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.(க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்















ஆவரங்கால் மத்திய விளையாட்டு கழகத்தின் புதிய மைதான திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் பதிவுகளை படங்களில் காணலாம்

# விக்னேஸ்வரா வி. கழக உதைபந்து சுற்றுத்தொடர்

## யங்கம்பன்ஸ் வெற்றி



மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் வி. கழகத்தை வீழ்த்தி தொடரின் முதல் வெற்றியை பதிவு செய்தது கம்பர் மலை யங்கம்பன்ஸ் வி.கழகம்.

குப்பிளான் விக்னேஸ்வரா வி.கழகம் நடத்திய உதைபந்தாட்ட தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் ரெட்றேஞ்சர்ஸ் வி.கழகத்தை எதிர்த்து மோதிக்கொண்ட யங்கம்பன்ஸ் வி.கழகம் ஆட்டத்தின் முதலாவது பாதியின் 5வது நிமிடத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்பை கொண்டு அணியின் முதல் கோலை போட்டார் தர்சன். ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் பிரகாஷ் கோல்போட்டு அணியின் கோலை உயர்த்த முதல் பாதி 2:0 என நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தின் மூன்றாவது கோலை 31வது நிமிடத்தில் இளம்வீரர் நிறோ போட்டு அசத்தினார். ஆட்டத்தின் நீண்ட நேரத்தின் பின்னர் ரெட்றேஞ்சர்ஸ் வி. கழக வீரர் 38ஆவது நிமிடத்தில் தம் அணிக்காக ஒருகோல் போட்டார். நேரமுடிவில் 3:1 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் வி.க வெற்றியீட்டி தொடரின் முதல் வெற்றியை பதிவு செய்தது. (க)

# இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தமிழ் மாநில லீக்குகளுக்கிடையிலான முதன்மை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு அரங்கில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் அக்கரைப்பற்று லீக் அணியை எதிர்த்து வலிகாமம் லீக் அணி மோதவுள்ளது.

தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாண லீக் அணியை எதிர்த்து கிண்ணியா லீக் அணியும் மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் வடமராட்சி லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு லீக் அணியும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் தீவகம் லீக் அணியை எதிர்த்து மட்டக்களப்பு லீக் அணி மோதவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று மாலை 4.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நெடியகாடு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நசரேத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது...

கொட்டும் மழைக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பேரணி இரண்டாவது நாளான நேற்று கேகாலை நெலுந்தெனிய வரை சென்றடைந்தது.

கூட்டு எதிர்க்கட்சியின் கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிய பாதயாத்திரையின் இரண்டாவது நாளான நேற்று காலை 10.30 மணியளவில் உதுவன்கந்த பகுதியில் உள்ள விகாரைக்கு அருகில் இருந்து ஆரம்பமாகியது.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிர் கட்சியின் உறுப்பினர்கள் மதவழிபாடுகளின் பின்னர் கொழும்பை நோக்கிய பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.

கொட்டும் மழைக்கு மத்தியில் சிங்கள பாரம்பரிய நடனம் மற்றும் மயிலாட்டம் என களைகட்டிய கூட்டு எதிர்க்கட்சியின் இரண்டாம் நாள் பாதயாத்திரையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ச, டலஸ் அழகப்பெரும, கெஹலிய ரம்புக்வெல, நாமல் ராஜபக்ஷ, உதய கம்மன்பில, பவித்ரா வன்னியாராச்சி, மகிந்தானந்த அழுத்கமகே, அமுனுகம, கீதா குமாரசிங்க, குமார வெல்கம, ச.பி.ரத்நாயக்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித அபேகுணவர்தன உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்துக் கொண்டனர்.

நல்லாட்சியே வெளியேறு, ஆட்சியை கொடு, நாட்டை பாதாளத்தில் தள்ளாதே என பல்வேறு கோஷங்களுடன் உதுவனகந்த பகுதியில் இருந்து கேகாலை நகரை நோக்கி பிரதான வீதியை ஆக்கிரமித்து பாதயாத்திரை முன்னேறியது.

நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் கேகாலை நகரை அண்மித்த பாதயாத்திரைக்கு ஆதரவாளர்களினால் வரவேற்பளிக்கப்பட்டது.

பாதயாத்திரையில் நடையாகவும் வாகனத்தில் ஏறியும் கலந்துகொண்ட மகிந்த ராஜபக்ஷ பாதையின் இருமருங்கிலும் இருந்த மக்களுக்கு கைகளை அசைத்த வண்ணம் கலந்துகொண்டார்.

கேகாலை நகர் முழுவதுமாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தநிலையில் மெதுவாக இரண்டாம் நாளுக்கான இறுதி இருப்பிடமான நெலுந்தெனிய நோக்கி பாதயாத்திரை மாலை 6.10 மணியளவில் சென்றடைந்தது.

முன்னதாக வாகனநெரிசல் காரணமாக கேகாலை நகரில் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டனர்.

குறிப்பாக போக்குவரத்து நெரிசலை தடுப்பதற்காக மாற்று வழிகளில் வாகனங்களை திருப்பி அனுப்பினர்.

பாடசாலை முடிவுறும் நேரம் என்பதால் முழு அளவில் சனநெருக்கடியில் கேகாலை நகர் நிறைந்தது. அதேபோன்று பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. கடலை மற்றும் பானங்கள் வழங்கப்பட்டமை நேற்றைய நாளில் முக்கியமான வரவேற்பாக காணப்பட்டிருந்தது. (செ-11)

## 18 இலட்சம்...

தலைமன்னார் பிரதான வீதி சிறுத்தோப்பு காட்டுப்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 18 இலட்சம் ரூபாய் பெறுமதியான 18 கிலோ 600 கிராம் எடை கொண்ட கேரளக்கஞ்சாப்பொதிகளை பேசாலை பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மீட்டுள்ளனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகஸ்தர் சசிக்குமாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிஸின் ஆலோசனைக்கு அமைவாகவும், பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம்.கின்சிலி ஹேரத்தின் வழி நடத்தலின் கீழ்,

மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் விவுத்தி சந்திரசேகர தலைமையில் சென்ற பொலிஸ் அதிகாரிகளான வனசிங்க, சசிக்குமார், சபீத் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினரே சிறுத்தோப்பு காட்டுப் பகுதியில் பதுக்கி வைத்திருந்த கேரளக் கஞ்சாப்பொதிகளை மீட்டுள்ளனர்.

9 பொதிகளில் அடைக்கப்பட்ட குறித்த கஞ்சாப்பொதிகள் 18 கிலோ 600 கிராம் எடை கொண்டது என தெரிவித்த பொலிஸார் சுமார் 18 இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்தது என தெரிவித்துள்ளனர். எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பேசாலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-4)

## எமது தனித்துவம்...

நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகை தந்திருந்த கனடா வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் டியோன் நேற்றைய தினம் காலை வடக்கு மாகாண முதலமைச்சரினை கைதடியிலமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் அரசியல் ரீதியான தற்போதைய நிலையென்ன என்பதை அறிந்து கொள்வதற்காக வந்திருந்தார்கள். இலங்கை இந்தளவு காலம் தமிழ் மக்களுடன் எதிர் நோக்கியது போன்று தாமும் கியூபெக் மாகாண மக்களுடன் பிரிவினைவாதம் தொடர்பிலான பிரச்சினையை எதிர்நோக்கியிருந்ததாகவும், அதனை தற்போது தீர்த்து கனடா நாடு கூடிய வலுவுடன் முன்னேறிக்கொண்டு இருப்பதாக எடுத்துக்கூறினார்.

இதே போன்றதொரு நிலையை இலங்கை அடையுமா? என என்னிடம் கேட்டார். அவ்வாறு அடைவதற்கு காணப்படும் தடைகள் எவை என்பன குறித்தும் என்னிடம் கேட்டிருந்தார். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இந்த நிலை இருந்தது. நாடுபூராகவும் தமிழ் மக்கள் ஆங்காங்கே வீடுகளை வாங்கி வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்கள்.

எந்தவிதமான தடைகளும் இருக்கவில்லை யாரும் எங்கும் செல்லும் நிலை காணப்பட்டது. ஆனால் 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை கொண்டு வந்து தமிழ் மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தியதிலிருந்து அரசியல் ரீதியான பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கி வருகின்றோம். நாட்டின் ஒருமைப்பாட்டை நாம் எதிர்க்கவில்லை.

இந்த அடிப்படையில் தான் மக்கள் தேர்ந்தெடுத்திருகின்றார்கள். எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பிரிவினையை நாம் கோரவில்லை. நாம் பிரிவினைவாதத்திற்கு ஆதரவு அளிக்கவில்லை. ஆனால் நாட்டில் எங்களுடைய தனித்துவம் பேணப்பட வேண்டும் என்ற கருத்தை எடுத்து கூறினேன். தனித்துவம் பேணுவது என கூறும் போது,

பாரம்பரியமாக எங்களுடைய மொழி, மதங்கள், கலாசாரம், வாழ்க்கை முறை இவை எல்லாம் நாட்டின் மற்றைய பாகங்களில் உள்ள ஏனைய மக்களுடைய வாழ்க்கை முறைகளில் இருந்து வேறுபட்டு காணப்படுவதனால் அவை பேணப்பட வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருந்தேன். இதனை வெளிவிவகார அமைச்சரும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

கியூபெக் நாட்டு மக்கள் கனடாவிலிருந்து பிரியத் தேவையில்லை என்ற ஒரு தீர்மானத்திற்கு வந்ததை சுட்டிக்காட்டி, எங்களிடம் இவை பற்றி கேட்டால் அனுசரணைகள் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்கூறினேன். அவரொரு வித்தியாசமான கேள்வி ஒன்றினை என்னிடம் கேட்டார். நீங்கள் ஒரு தமிழர் என்றும் இலங்கையர் என்றும் கூறுவதில் பெருமை அடைவீர்களா? என கேட்டார்.

அதற்கு நான் கூறினேன், அவ்வாறு தான் முன்னர் இருந்துள்ளோம். இலங்கையர் என்ற வகையில் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் என்று கூறுவதில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. கனடா நாட்டிலுள்ள தமிழ் மக்கள் போன்று இலங்கை தமிழ் மக்கள் என்று கூறுவோம் என கூறினேன். ஆனால் தமிழர்களுடைய தனித்துவம் அவர்களுடைய பாரம்பரியம் எத்தனையோ வருடகால அவர்களுடைய சரித்திரம், இவை எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தின் வெளியிலிருந்து மக்களை குடியேற்றுவது எல்லாம் எங்களுடைய தனித்துவத்தை தொலைப்பதற்கு ஒப்பாகும் எனக் கூறினேன். இதை கனேடிய அமைச்சர் ஏற்றுக்கொண்டார். தாம் கனடா நாட்டை சேர்ந்தவர் என்ற வகையில் இந்த நாட்டில் அமைதி சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்கு தாம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் இரு மொழி பாண்டித்துவம் ஏற்படுத்துவதற்காக சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நிதி வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் கூறினார்.

மேலும் கனடா நாட்டில் தமிழ் பேசும் மக்கள் நல்ல நிலையில் இருப்பதாகவும் அவர்கள் எங்கிருந்தாலும் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று தான் பிரார்த்திப்பதாக கூறியதாக முதலமைச்சர் ஊடகங்களிடம் தெரிவித்தார். (செ-4)

## இனவாத...

ரைக்கு எவ்விதமான இலக்கும் இல்லை. எவ்விதமான இலக்குகளும் இல்லாமல் ஏன் இவ்வாறான போராட்டத்தை செய்கின்றனர் என்று புரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதயாத்திரை விவகாரம் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் விபரிக்கையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் டிலான் பெரேரா கூறினார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்

கூட்டு எதிரணியின் பாதயாத்திரைக்கு எவ்விதமான இலக்கும் இருப்பதாக தெரியவில்லை. இவ்வாறான பாதயாத்திரையை முன்னெடுத்து ஒருபோதும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. காரணம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நான்கரை வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது.

அதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலும் நடைபெறாது. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிடவும் முடியாது.

எனவே எவ்விதமான நோக்கமுமின்றி ஏன் இந்த பாதயாத்திரையை கூட்டு எதிரணி முன்னெடுக்கின்றது என்று எங்களுக்கு புரியவில்லை. வற்வரி அதிகரிப்புக்கு எதிராக இந்த பாதயாத்திரை இருக்குமாயின் ஒரு நியாயம் இருந்திருக்கும்.

ஆனால் இந்த பாதயாத்திரையில் இனவாதமே தூண்டப்படுகின்றது. புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிக்கு எதிராக கோஷமிடுகின்றனர். இதன்மூலம் எதனை அடையப்போகின்றனர் என்று புரியவில்லை. ஆனால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என்பது நிச்சயமாகும்.

மேலும் இந்த பாதயாத்திரை மூலம் ஐக்கிய தேசிய கட்சியின் தேவை நிறைவேற்றப்படுகின்றதா? என்ற சந்தேகமும் எழுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுவதை ஐக்கிய தேசிய கட்சி விரும்பும். எனவே இவ்வாறு செய்வதன் ஊடாக மறைமுகமாக ஐக்கிய தேசிய கட்சியின் தேவையை கூட்டு எதிரணி நிறைவேற்றுகின்றதா? என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகின்றது.

ஆனால் ஒரு விடயத்தை இங்கு மிகவும் உறுதியாக பதிவு செய்கின்றேன். அதாவது இனவாதத்தை முன்னிறுத்தி பாதயாத்திரை முன்னெடுக்கப்படுகின்றது என்பதற்காக அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டில் தடைகளோ முட்டுக்கட்டைகளோ ஏற்பட்டுவிடும் என்று தமிழ் பேசும் மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதனூடாக தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவே தேசிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

அந்த உயரிய நோக்கத்துக்காகவே தேசிய அரசாங்கம் என்ற எண்ணக்கரு செயற்படுகின்றது. எனவே அரசியல் தீர்வு குறித்த நம்பிக்கையை கைவிட்டுவிடவேண்டாம் என்பதனை அனைத்து தரப்பினருக்கும் தெரிவிகின்றேன். முக்கியமாக தமிழர்கள் நம்பிக்கையிழந்துவிட கூடாது. நம்பிக்கையுடன் இருங்கள். தேசிய அரசாங்கத்தின் ஊடாக தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம் என டிலான் தெரிவித்தார். (செ-11)

## வழிபாட்டுக்கு...

கள் சார்பாக தொலைநகல் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பியுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கையில்,

இந்துக்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்காக பிதிர்க்கடன் செலுத்தி பக்திபூர்வமாக அனுஷ்டிக்கும் விரதமே ஆடி அமாவாசையாகும்.

இதனை அனுஷ்டிப்போர் அன்றைய தினம் உணவை சுருக்கி கீரிமலை தீர்த்தக்கரையில் தமது முன்னோர்க்கு சிரார்த்த கடனை செய்து அருகில் உள்ள கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திலும் அதற்கு அருகில் தற்போது விடுவிக்கப்படாமல் உள்ள பாதாள கங்கை எனப்படும் ஆதி நகுலநாதன் ஆலயம் அமைந்திருந்த திருத்தம் பேஸ்வரத்திலும், சடையம்மா மட புவனேஸ்வரி அம்மன் ஆலயத்திலும் ஈழத்து திருச்செந்தூர், உச்சிப்பிள்ளையார், கிருஸ்ணன்கோவில் ஆலயத்திலும் வழிபாடு மேற்கொள்வது தொன்று தொட்டு வரும் வழமையாகும்

கீரிமலைப்பகுதியில் தற்போது பல இடங்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் சில மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட ஆலயங்களில் சைவ மக்கள் தமது புனித கடமையை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதன் மூலம் நல்லாட்சியை நிலைநாட்டும் கொள்கையுடைய இந்த அரசு குறித்த விடயம் தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டினை மேற்கொள்ளுமாறு சைவ மதத்தவர் சார்பாக வேண்டுகிறோம் என குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## தமிழர்களின்...

அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். இவ்விடயத்தில் கனடா அரசாங்கத்துக்கு தொடர்ச்சியான உந்துதலை வழங்க வேண்டும்.

இவ்வாறு இலங்கையில் மூன்று நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோனிடம் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கனேடிய வெளிவிவகார அமைச்சருக்கும், எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஒருவர் பல வருடங்களின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது நல்லிணக்கம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகள் தொடர்பில் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோன் கேட்டறிந்து கொண்டார்.

விசேடமாக புதிய அரசியல் சாசன உருவாக்கம் தொடர்பான நிலைமைகளை அவர் எம்மிடத்தில் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், இலங்கையில் நீண்டகாலம் நிலைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக தீர்வினை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் தொடர்பாகவும் அவர் எம்முடன் ஆராய்ந்தார்.

இந்த நாட்டின் தேசிய இனமாகவிருக்கும் தமிழ் மக்களுக்கு சமத்துவம் வழங்குகின்ற வகையிலும், அவர்களின் அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டால், அது தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வாக அமையும். அதற்கான சந்தர்ப்பம் தற்போது அமைந்துள்ளது. அந்தச் செயற்றிட்டத்தில் நாங்கள் பொறுப்பாக ஈடுபட்டிருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோனிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

எமது மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் அரசியல் சாசனம் உருவாக்கப்படுமாக இருந்தால், அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். இவ்விடயத்தில் கனடா இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியான உந்துதலை வழங்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கனேடிய வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தினார் என சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## 8 ஆண்டு மறியல்...

விசாரணை நேற்று எடு த்துக்கொள்ளப்பட்ட போது கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஜராங்கனி பெரேரா குறித்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்த குற்றத்திற்காக குற்றவாளியை அதிகபட்சமாக 7 வருடங்கள் மாத்திரமே சிறையில் வைக்க முடியும் எனவும் குறித்த குற்றவாளி ஏற்கெனவே 8 வருடங்கள் சிறையில் மறியலில் இருந்த அவருக்கான தண்டனை 3 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளதென நீதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். இதேவேளை மீண்டுமொருமறை இவ்வாறான குற்றங்களில் ஈடுபட வேண்டாம் என குற்றவாளியை நந்திபதி எச்சரித்துள்ளார். (செ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக் கட்சி...

செய்து வருகின்றார் என வடமத்திய மாகாணசபை உறுப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் சுமை, வரிச்சுமை மற்றும வீழ்ச்சியடையும் பொருளாதாரம் என்ற தொனிபொருளில் மஸ்கெலியா கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இங்கு உரையாற்றுகையில்,

ஜனவரி 8ஆம் திகதி தேர்தலில் தோல்வியை தழுவிக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியை கைப்பற்ற நடத்தப்படும் கண்டி பாதயாத்திரை, ரோதை யாத்திரையாக மாறிவிட்டது.

பாத யாத்திரை என்றால் நடந்தே செல்ல வேண்டும். மகிந்தவுக்கு வயது 70 ஆகியதால் வாகனத்தில் யாத்திரையாக செல்கின்றாரா? என்பது தெரியவில்லை.

மக்களுக்கான சுதந்திரமான உரிமைகளை அனுபவிக்கக்கூடிய வகையில் அரசு ஒன்று வேண்டும் என்பதற்காகவே இந்த புதிய அரசாங்கத்தை மக்கள் வாக்களித்து தேர்வு செய்தனர்.

இருந்தும் கடந்த அரசாங்கத்தை போலவே இந்த கூட்டு ஆட்சி அரசாங்கமும் மக்களுக்கென துரோகங்களை செய்து வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்தி தனி ஆட்சி ஒன்றுக்கான விதையை போடுவதற்கு நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா சுதந்திர கட்சியின் சில அங்கத்தவர்களை கொண்டு முயற்சி செய்து வருகின்றார்.

இந்த வகையில் விமல் வீரவன்ஸ, கமமன்பில போன்ற இன்னும் பலர் நாடகம் ஒன்றை அரங்கேற்றி வருவதாக தெளிவாக தெரிகின்றது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க தனி ஆட்சி ஒன்றை அமைக்க வீரவன்ஸ, கம்மன்பில ஆகியோரை முக்கிய துரும்புகளாக பாவித்து வரீகின்றார்.

ஜனாதிபதியின் ஆலோசனைகளுக்கு பிரதமர் செவி சாய்த்து வந்தாலும், ஜனாதிபதியின் கடமைகளையே பிரதமர் மேற்கொண்டு வருகின்றார்.

இருந்தாலும் நிலையான தனி அரசு இல்லாமல் ஜனாதிபதியால் இயங்க முடியாது என்பதை ரணில் தெரிந்து கொண்டு இவ்வாறு செயற்பட்டு வருகின்றார்.

நாட்டில் நீதியை சுதந்திரமாக செயற்படுத்த சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு சுதந்திரத்தை வழங்காமல் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தனியான உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றனர். இது எந்தவகையில் நியாயமான ஒன்றாகும்.

இச்செயற்பாட்டினால் குற்றச் செயல்கள் அதிகரிக்கும். இடம்பெற்ற ஊழல் நடவடிக்கைகள் மூடி மறைக்கப்படும் என்பதை இவர்களே தெளிவுபடுத்துகின்றனர்.

அத்தோடு இவர்கள் அரசியல் இலாபத்தை நோக்காக கொண்டு செயற்படும்போது சட்டத்தை சரியாக நிலைநாட்ட முடியாது தடுமாறி வருகின்றார்கள்.

இதைவிட தனி அரசாங்கத்தை கைப்பற்றுவதற்காக கூட்டு ஆட்சி அரசாங்கத்தை உடைத்து பலத்தை பெறுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறுக்கு வழியாக பாத யாத்திரையை வாகன யாத்திரையாக கொண்டு செல்கிறார்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெருபான்மை பலம் பெற்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் மாத்திரமே இவரால் ஆட்சியை கைப்பற்ற முடியும்.

இல்லையேல் 2020 ஒகஸ்ட் வரை இந்த அரசை கொண்டு செல்வார்கள். ஆனால் மக்களின் விசுவாசத்தை காப்பாற்ற முடியாமல் இந்த இரு கட்சிகளும் தமது சக்தியை இழந்து வருகின்றன என அவர் தெரிவித்தார். (செ-11)

## முன்னாள் எம்.பி...

கடந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரச வாகனங்கள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டிருந்தன.

குறித்த வாகனத்தை உரிய அமைச்சகத்தில் திரும்ப ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் ஒப்படைக்கவில்லை என கூறப்படுகின்றது.

கொழும்பு கொள்ளுபிட்டியில் பொலிஸாரால் நேற்று முன்தினம் வாகனமும் ஓட்டுநரும் கைது செய்யப்பட்ட நிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன விசாரணைக்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றது.

2010-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு இவர் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதே ஆண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு விலகி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டார்.

2015-ம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## "தாங்க முடியா...

கேகாலை மாவட்டத்தில் 50 பிரிவெனாக்கள்மற்றும்தேவாலயங்களுக்குநேற்றுக் கணனி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார். (செ-11)


கார் வாடகைக்கு தேவை
மாத அடிப்படையில் கார் வாடகைக்குத் தேவை
(TATA,SUZUKI)
தொடர்பு :
077 5358 979

வேலைவாய்ப்பு
யாழ் கச்சேரியடியில் உள்ள அச்சகத்துக்கு வேலை தெரிந்தவர், பழக விரும்புபவர் தேவை
(பெண்கள் மட்டும்)
077 504 0714
(5471)

SHAMROCK
ஈச்சமோட்டை
2017/2018
B.ST :- B.S.பசில்
ECON :- P.பிரதாப்
ACC :- S.தவா
ENG.LIT :- 10,11
நடைபெறுகின்றது.

Personal Class-கணினி
*12வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2016, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்:KRC

A/L
பௌதிகவியல்
பிரத்தியேக வகுப்புக்கள்
077 3164504

வீட்டுப் பணிப் பெண் தேவை
சமையல் மற்றும் வீட்டு வேலைகளில் முன் அனுபவம் மிக்க வீட்டுப் பணிப் பெண் உடனடியாக தேவை.
தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
076 853 6301

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1538

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
FRENCH பிரெஞ்சு மொழி
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!
021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(5265)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-5330)

நீங்கள் இம்முறை
A/L பரீட்சைக்கு தோற்றுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE ➡ DIPLOMA ➡ DEGREE
With FREE English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

சின்னமடு யாத்திரைஸ்தல பெருவிழாவை ஒட்டி கடைகளுக்கான கூறல் ஏலத்தில் விடப்படும்
சரவணை - சின்னமடு ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தையொட்டி சாப்பாடு, இனிப்பு, கச்சான், ஐஸ்கிறீம், பான்சிக் கடைகளுக்கான ஏலம் கூறல் 01.08.2016 அன்று சரவணை சின்ன மடு ஆலயத்தில் வழங்கப்படவுள்ளது.
கடைகளைப் போடுவோர் அதற்கு முன்னதாக ஊர்காவற்றுறை பிரதேச சபையில் அனுமதி பெற்று அவர்களின் அனுமதிச் சீட்டை காண்பிப்போருக்கு மட்டுமே கடைகள் வழங்கப்படும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.
காலம் :- 01.08.2016
நேரம் :- காலை 9.00 மணி
இடம் :- சரவணை - சின்னமடுமாதா ஆலயம்
பரிபாலகர் - அருட்பணி.ஞா.பீற்றர்
(5458)

உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன் CCTV Camera
Full HD 1080P
- Internet, Mobile Phone மூலம் எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட கால உத்தரவாதம்.
- விற்பனைக்கு பிந்திய சேவை மேலதிக விபரங்களுக்கு 075 9997798 075 9991598
SECURITY SOLUTION FOR EVERY ONE
8CH Camera System
8CH Startec Full HD AHD 2 Megapixal Support DVR - 20000 /=
Hard Disk 1000 GB - 9500 /=
AMARON 800 - 1.3 Mega Pixal (3 MP) Camera 8 - 7000 /=
12V 10AM Power Supply - 2500 /=
Only 88,000 /
. வடக்கில் 5 வருட கால சேவை அனுபவத்தை கொண்ட ஒரே ஒரு நிறுவனம்
இல. 315,1/2 பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel : 0212219234 Fax : 0212219235 email : info@aj-sys.lk web : www.aj-sys.lk
@j SYSTEMS
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
AJ SYSTEMS I (PVT) LTD
(C-5322)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org